# வெற்றிமுனை

பன்னாட்டுத் தமிழில் மேம்பாட்டு மாத இதழ்

தனி இதழ் : ரூ. 30/- ISSN - 2394 - 2438

அன்பு நிறைந்த அறிவைத் தேடி ஒரு பயணம்

*மலர் - 08* *பிப்ரவரி - 2018* *இதழ் - 03*



*சிறப்பாசிரியர்*
நீதியரசர் ச. மோகன்
(உச்சநீதிமன்ற மேனாள் நீதியரசர்)

*முதன்மை ஆசிரியர்*
நீதிபதி மூ. புகழேந்தி

*ஆசிரியர்*
முனைவர் மோ. பாட்டழகன்
93804 17307

*பொறுப்பாசிரியர்*
பேரா. முனைவர் ச. விஜயலெட்சுமி

*துணை ஆசிரியர்கள்*
பேராசிரியர் சு. முத்தையா
கவிஞர் திருவைபாபு
இர. மகேந்திரன்
கவிஞர் உமர் கத்தாபு
திருமதி. அனிதா பரமசிவம்
(எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்
கவிஞர் செந்தாமரைக்கொடி

*அமெரிக்கா - பொறுப்பாசிரியர்*
எழுத்தாளர் ஜெ. புவனேஷ்வரி

ஆலோசனைக் குழு

முனைவர் மருதூர் அரங்கராசன்
முனைவர் இனியன் கோவிந்தராஜீ, கரூர்
முனைவர் சி. கோமளவல்லி
எம். கோவிந்தன்
பேராசிரியர் அரகங். சீனிவாசன்
பேரா. திருமதி. சோதிலட்சுமி
இரா. கெளதமராஜன்
திருமதி. விசயலட்சுமி மாசிலாமணி
முனைவர் மோ.ஐ. மகேஸ்வரி
முனைவர் ஈ. யுவராணி
சி. சதீஷ்
திருமதி. பூமாவதி இராசேந்திரன்


மின்னஞ்சல் மூலமும்
படைப்புகளை அனுப்பலாம்
vasantha.tha399@gmail.com


இதழின் அனைத்துத் தொடர்புகளுக்கும் படைப்புகள் மற்றும் கருத்துரைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
ஆசிரியர் 'வெற்றிமுனை'
26, குறுக்குத் தெரு, ஜோசப் காலனி, ஆதம்பாக்கம், சென்னை – 600 088.
93804 17307

புலவர், முத்தமிழ்க் கவிஞர், முனைவர்

ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களின்

# “நூலகத்தால் உயர்ந்தேன்”

எனும் வாழ்க்கை வரலாறு புத்தகமாக வெளிவர இருக்கிறது.

எழுபத்தைந்து அகவை நிரம்பிய அவர்தம் வாழ்நாளில் சந்தித்த பலநூறு அறிஞர்களைப் பதிவு செய்து வைத்துள்ளார். இந்நூல் ஒரு குட்டி இலக்கிய வரலாறு எனலாம்.

***1096 பக்கம் கொண்ட இந்நூல் விலை ரூ. 1200/- நூல் வேண்டுவோர் :***

**தொடர்புக்கு :**

**முனைவோர் மோ. பாட்டழகன்,**

வசந்தா பதிப்பகம்,
26, குறுக்குத் தெரு, சோசப்பு குடியிருப்பு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
பேசி : 044 - 22530954, 225333667, 93804 17307

பெற்றோரைப் போற்றிடுவோம் பெருமையுடன் வாழ்ந்திடுவோம்
கற்றோரை நாடிடுவோம் கலையெல்லாம் மாந்திடுவோம்
வெற்றிமுனை எய்திடுவோம் விண்தொட்டுப் பார்த்திடுவோம்
குற்றமில்லா வாழ்வாலே குவலயத்தைக் காத்திடுவோம்.

- நீதிபதி மூ. புகழேந்தி



# பயம்

### பயம் என்பது ஓர் உணர்வு

எத்தகைய மனிதனையும் ஏதாவது ஒருபயம் ஆட்டு விக்கத்தான் செய்யும். எனக்கு எந்தப் பயமும் இல்லை என யாராவது சொன்னால் அதை எவரும் நம்பக் கூடாது. ஏதாவது சூழ்நிலையில் எங்காவது ஒரு மூலையில் அவருள் அது ஏற்படத்தான் செய்யும்.

பயம் என்பது அடிப்படை யான அல்லது உள்ளார்ந்த மன உணர்வுகளின் வெளிப்பாடு களில் ஒன்றாக உள்ளது என்றார் ஜான் பீ. வாட்சன்

சார்லஸ் டார்வின், த எக்ஸ்பிரசன் ஆஃப் த எமோசன்ஸ் இன் மேன் அண்ட் அனிமல் ஸில் பயம் காரணமான முகபாவனை மாறுவதை கூறு கின்றார். அந்நூலில் பயத்தைப் பற்றிய தெளிவான விளக்கத்தை வழங்கியிருக் கிறார்.

The presence of fear is a sure sign youre trusting in your own strength. என்ற ஆங்கில கூற்று உன்னையே நீ அறிவாய் என்ற சாக்ரட்டீஸின் வாசகத்திற்கு வகை செய்வதை நாம் உணரலாம்.

நம் வல்லுவப்பெருந்தகையும்

அஞ்சுவது அஞ்சாமை

என்ற குறட்பாவில் அஞ்சுவது குறித்து நாம் அஞ்சித்தான் ஆக வேண்டும் என்ற அடிப்படை யில் கூறியுள்ளது மனிதனின் அறிவுடைமையை உணர்த்துவ தாக நாம் உணரவேண்டும்.

இராக்கில் உள்ள அபூ ஹரெயிப் சிறையில் கைதியைப் பயமுறுத்துவதற்கு இராணுவ நாய் பயன்படுத்தப்படுகிறது.

மனித வாழ்க்கைய பயத்திற் குட்பட்டது என்பதற்கு சில எடுத்துக் காட்டுகளை நாம் காணலாம்.

ரோக்சானாவுக்கு பகுதிநேர வேலை செய்ய விருப்பம், ஆனால் அதை கணவனிடம் சொல்ல அஞ்சுகிறாள்.ஒருநாள் தன்னுடைய தாயாரைப் பார்த்து விட்டு வருவதற்கு பஸ் செலவுக் காக கணவனிடம் பணம் கேட்டாள்.

அப்படி கேட்டது தான் மிச்சம், உடனே ரோக் சானாவை வெளுத்து வாங்கி விட்டார், அடி பயங்கரமாக இருந்ததால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வேண்டியதாகி விட்டது.

சதா பயத்திலேயே அவள் வாழ்கிறாள்.

ரோலான்டோவின் மனைவி எப்போதும் இரவு நேரத்தில் பொதுப் போக்குவரத்தில் வீட்டிற்கு வருவது வழக்கம். ஆனால் இப்போது அவளுடைய கணவரே காரில் அவளை அழைத்து வருகிறார்.

அக்கம் பக்கத்தில் ஏகப்பட்ட வன்முறை சம்பவங்கள் நடப்ப தால், அவளுடைய பாதுகாப்பைக் கருதி ரோலான்டோ இப்படி செய்கிறார்.

தலைநகரத்தின் மையப்பகுதி யில் ஐடே வேலை செய்கிறாள் ஒருநாள் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, ஊர்வல மாக வந்த ஒரு கூட்டத்தில் மாட்டிக்கொண்டாள். அந்தக் . கூட்டத்தினரோ கடைசியில் வன்முறையில் இறங்கிவிட்டனர். ஆகவே, இப்பொழுதெல்லாம் ஊர்வலத்தின் சத்தத்தைக் கேட்டாலே அவளுக்கு நெஞ்சு படபடக்கிறது.

நான் பாது காப்புடன் இருப்பதாக உணரு வதில்லை. இங்கே வேலை செய்யவே எனக்கு இஷ்ட மில்லை.

ஆனால் என்ன செய்வது, வேறு வழி இல்லையே என அவள் புலம்புகிறாள்.

பாம்பைக் கண்டு மனிதன் பயப்படுகின்றான்.

பாம்பு மனிதனைக் கண்டு பயப்படு கின்றது.

மிருகங்களைக் கண்டு மனிதன் பயப்படுகின்றான். அவைகள் மனிதனைக் கண்டு பயப்படுவ தால் தான் காடுகளில் வாழ்கின்றன.

இப்படி பயம் என்பது எங்கும் எப்போதும் உள்ளது. நாம்தான் நிதானமாக நடந்து அதை வெற்றிக் கொள்ள வேண்டும்.

மக்கள் நலம் நாடும்,

**நீதிபதி மூ.புகழேந்தி**

♦

# அகிலன் நாவல்களில் சமுதாயம்

**அ. தீபா**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
சேலம் 16

## முன்னுரை

மனித வாழ்க்கை பிறப்பு, வளர்ப்பு, இறப்பு என்ற மூன்றும் நிலைகளை உள்ளடக்கியது. மனிதன் இம்மூன்றும் நிலைகளோடு இடைவிடாது தொடர்பு கொண்டு இயங்குகிறான். மனிதன் தன்னைச் சமுதாயத்தோடு இணைத்துக் கொண்டு இயங்குகிறான். சூழல், உணர்வு, குறிக்கோள் ஆகியவற்றின் மூலம் உருவானதே சமுதாயம். அத்தகைய சமுதாயத்தையும், அதில் வாழும் மனிதர்களையும், அகிலன் நாவல்களில் அமைந்துள்ள சமுதாய கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சமுதாயத்தின் தோற்றம்

மனிதர்களுடைய தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்காக ஒன்று கூடிய மக்கள் கூட்டமே சமுதாயத்தின் தோற்றமாகும். மக்களின் சிக்கல்களை ஆராய்ந்து அதிலிருந்து விடுபட தோற்றுவிக்கப்பட்டது. மனிதனின் கடமை, உரிமை, முதலானவைப் பாதுகாக்கத் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பாகவும் கொள்ளலாம்.

ஒரே வகையான எண்ணங்களுடைய மனிதர்கள் ஒன்றுபட்டுப் பொது நோக்கங்களுக்காக பாடுப்படும் பொழுது சமுதாயம் தோன்றுகிறது.

இத்தகைய சமூக வாழ்க்கையோடு நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், ஒழுக்கம் இவையெல்லாம் இணைந்த நாளே முழுமையான சமுதாயம் உருவான நாள் என்று கூறலாம்.



### சமூகமும் நாவலும்

தனிமனிதன் குடும்பத்தால் உருவாக்கப்பட்டுச் சமூகத்தில் பங்குகொள்ள வரும்பொழுது சமுகமனிதன் ஆகின்றான். இதனால் சமுகத்தில் சில கோட்பாடுகளும் உருவாக்கப்படுகின்றன. தனிமரம் தோப்பாகாது என்பது பழமொழிக்கேற்ப தனிமனிதன் சமூகம் என்று கருதப்படமாட்டான். மனிதர்களிடையே காணப்படும் ஒற்றுமை என்ற பண்பே சமூகத்தை நிறுவ அடித்தளமாகிறது. மனிதனின் தேவையை, சிக்கலை, போராட்டத்தை வெளிப்படுத்துவதன் மூலம் மனித சமுதாயத்தை மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்த கருவியாக இலக்கியம் செயல்படுகிறது. இவ்விலக்கியத்தின் முக்கிய குறிக்கோள் சமுதாய முன்னேற்றமேயாகும். இலக்கியத்தின் ஒரு பகுதியான நாவலும் இதன் அடிப்படையிலே எழுதப்படுகிறது.

மனித உறவுகளை நேரடியாகப் பாதிக்கக்கூடிய சமூக சிக்கல்களைப் பொது நிலையிலோ அல்லது ஒரு குறிப்பிட்ட சூழலின் பின்னணியிலே எடுத்துரைக்கும் நாவல்களே சமூக நாவல்கள் எனப்படுகிறது.

### காதல்

காதல் என்பது ஓர் ஆண் அல்லது பெண் தன் வாழ்க்கை துணையைத் தானே தன் விருப்பப்படி தேர்ந்து இணைவது ஆகும். இதற்கு சமூக விதி முறைகள் சாதகமாக இல்லை. வயது, பணம், சமூக அந்தஸ்து சாதி, சமயம், மொழி, ஆகிய வற்றில் ஒன்றோ பலவோ காதல் இணைகளுக்குக் குறுக்கே வருகின்றன. இவற்றையெல்லாம் மீறிக் காதல் என்பது நிகழத்தான் செய்கின்றன.

பொன்மலர் நாவலில் சங்கரி என்ற பெண் பேரழகு வாய்ந்தவள். படிக்கும் வயதில் குருமூர்த்தியிடம் பழக்கம் ஏற்பட்டது. குருமூர்த்தியோ சங்கரியின் அழகை மட்டும் நேசித்தானே தவிர அவளுடைய மனதை நேசிக்கவில்லை. இதனால் சங்கரி குருமூர்த்தியிடம் தன்னுடைய கற்பை இழக்க நேரிடுகிறது. இதனை அறிந்த சங்கரியின் அப்பா ஒரு நாள் ரயிலில் அடிப்பட்டு மாண்டு போனார். தாய், தந்தை இல்லாத சங்கரி மன இறுக்கத்திற்கு ஆட்பட்டு தற்கொலைக்கு முயற்சி செய்கிறாள். அந்த சமயத்தில் திருஞானம் வந்து காப்பாற்றுகின்றான். திருஞானத்தின் அறிவுரைகளைக் கேட்ட சங்கரி, குருமூர்த்தியால் ஏற்பட்ட அவமானத்தை வாழ்க்கையில் ஊன்றுக்கோலாக எடுத்துக் கொண்டு பிற்காலத்தில் மனித உயிரைக் காப்பற்றும் மருத்துவராக உயர்ந்து விட்டாள். இன்பம் துன்பம் நிறைந்தது தான்

வாழ்க்கை இரண்டையும் ஏற்கும் மனவுறுதி பெறுவதே அமைதி யான வாழ்க்கைக்கு வழி என்று அகிலன் சங்கரி என்ற பெண் மூலம் வெளிப்படுத்தி யுள்ளார். இதனை கவிஞர் கண்ணதாசன்,

வாழ்க்கை என்றால் ஆயிரம்
இருக்கும்
வாசல்தோறும் வேதனை
இருக்கும்

வந்த துன்பம் எதுவென்றாலும்
வாடி நின்றால் ஓடுவதில்லை
எதையும் தாங்கும் இதயம்
இருந்தால்
இறுதி வரைக்கும் அமைதி
இருக்கும்.

என்ற பாடல் வரிகளுக் கேற்ப வாழ்க்கையின் ஆழத்தை வெளி படுத்தியுள்ளார்.

### திருமணம்

நாகரிக மக்களின் சமூக வாழ்வில் திருமணம் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும். அது அவர்களது வாழ்க்கையை நெறிப்படுத்தி ஒழுக்கத்திற்கு வரம்பு கோலுகிறது. இதனையே தொல்காப்பியர்

பொய்யும் வழுவும் தோன்றிய
பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப
(தொல் கற்பு-145)

எனக் குறித்துள்ளார்.

சித்திரப்பாவை என்னும் நாவலில் வரும் ஆனந்தி அண்ணாமலையை விரும்பு கிறாள். இதனை அறிந்த மாணிக்கம் பல சூழ்ச்சிகளைச் செய்து ஆனந்தியை திருமணம் செய்துக்கொள்கிறான். திருமணம் நடைப்பெற்ற நாள் முதல் மாணிக்கத்திற்கு தேவையான பணிவிடைகளை செய்யும் குடும்ப பெண்ணாக திகழ்ந்து வந்தாள். ஆனால் மாணிக்கம் ஆனந்தியை ஒரு போகப் பொருளாகப் பயன்படுத்தினான். அதுமட்டுமல்லாமல் மாணிக்கம் வேறொரு பெண்ணிடம் உறவு வைத்திருந்தான். இதனை அறிந்த ஆனந்தி அதிர்ச்சியடைந் தாள். இருப்பினும் இந்த செய்தியை பற்றி தன் கணவனிடம் கேக்க வில்லை. தன் தந்தைக்கு எந்த விதமான அவமானத்தையும் ஏற்படுத்தகூடாது என்று எண்ணினாள். இதனை,

அழகாக வாழக் கற்றுக் கொள்:
முடிந்தால் வாழ்க்கையை
அழகுபடுத்து: முடியாவிட்டால்
அதை அசிங்கப்படுத்தாமலாவது
இரு!

என்று வரிகளின் மூலம் அகிலன் திருமண வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களை குறிப்பிடுவது மட்டுமல்லாமல் அவற்றை எப்படி அழகாக வாழ வேண்டும் என்ற கருத்தை ஆனந்தியின் தந்தை மூலன் இச்சமுதாயத்திற்கு உணர்த்தி யுள்ளார். இப்படி பட்ட பொருந்தா திருமணத்தை,

முகவரி
சரியா எழுதப்படாத


ஒரு கடிதம்
எங்கெங்கோ சென்று
முட்டி மோதி அலைந்து விட்டு
என்னிடமே திரும்பி விட்டது.

என்ற மு.மேத்தாவின் வரிகளுக்கு ஏற்ப அவள் தேர்ந் தெடுத்த பொருந்தாத் திருமணம் தோல்வியில் முடிந்தது. இங்கு அகிலன் படைப்பு யதார்த்த மானது. சமூக நடப்புகளை அப்படியே தருவதாய் அமைந்துள்ளது.

## வறுமை

வறுமை என்பதற்கு வெறுமை என்று தமிழ் அகராதி விளக்கம் தருகிறது. உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றையும் அடிப்படைத் தேவைகளாக மனிதன் கருதிகிறான்.மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய இயலாமையே வறுமை எனப்படுகிறது. அவ் வறுமையின் நிலையினை அகிலன் அவர்கள் புதுவெள்ளம் என்னும் நாவலில் வரும் முருகையா என்பவர் படிக்கும் பருவத்தில் காந்தி மீது அதிகம் பற்று கொண்டு இருந்தார். இதனை அறிந்த காவல்த்துறை முருகை யனை கைது செய்து சிறையில் அடைத்தனர்.சிறை தண்டனை முடிந்த பின்பு சொந்த ஊருக்கு வருகிறார். முருகை யனின் வருகை தந்தைக்கு ஆனந்தம்.

முருகையன் படித்து பெரிய பட்டதாரியாக வருவான் என்று எதிர்பார்த்த தந்தையின் கனவு நிறைவேறாமல் போய்விட்டது. இருப்பினும் இதையெல்லாம் பொருட் படுத்தாமல் தன் மகனுக்கு தேவையான கடமை களை செம்மையாக செய்து வந்தார். ஒரு நாள் முருகையன் தந்தை அளவுக்கு மீறி கடன்




வாங்கியதாக அவர்களுடைய வீடு, தோட்டம் அனைத்தும் போய்விட்டது. அதனால் முருகையன் குடும்பம் மாடி வீட்டில் இருந்து கூரை வீட்டிற்கு குடிவந்தார்கள். எப்பொழுதும் பலவகையான உணவு உண்ட வீட்டில் இப்பொழுது அரிசிக்கு பஞ்சம் வந்து விட்டது. இதனை,

முருகையன் வீட்டுக்குள்ளே யும் அரிசிப் பஞ்சம் நுழைந்து விட்டது. குன்றுகளைப் போல் களங்களில் போர்களைக் குவித்து வைத்திருந்த சிவபிரகாசத்தின் வீட்டுக் கலயத்தில் உழக்கரிசி இப்போது இல்லை.

என்ற வரிகளின் மூலம் ஆசிரியர் முருகையன் வீட்டு வறுமையின் நிலையினை அழகாக படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

**உணவுப் பொருட்களில் கலப்படம்**

மக்களின் அடிப்படைத் தேவைகளின் ஒன்று உணவு. அத்தகைய உணவு உயிர் வாழ் வதற்கே தவிர உயிரை எடிப்பதற் காக அல்ல. அகிலனுடைய புது வெள்ளம் நாவலில் வேலாம்மாளுக்குக் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக அளவுக்கு அதிகமான ஜல தோஷமும் மூச்சித் திணறலும் தொண்டைக் கட்டும் இருந்தது. வழக்கமாக எந்த கைமருந்தைச் சாப்பிடுவா ளோ அதைத்தான் இந்த முறையும் சாப்பிட்டாள். ஆனால் நோய் தீரவில்லை. அதற்கு மாறாக வாந்தியும் பொறுக்க முடியாத வயிற்று வலியும் ஏற்பட்டது. கடைசியில் நோயுடன் போராடி விட்டுப் பிறகு மருதுவமனைக்கு மிகவும் மோசமான நிலையில் போய் சேர்ந்தாள். மருத்துவரிடம் காரணம் கேட்டான் முருகையன். அதற்கு மருத்துவர் கூறிய காரணம் முருகையனைத் திடுக்கிட வைத்து. இதனை,

இவள் சாப்பிட்ட மஞ்சள் தூளில் ஏதாவது வெளிப் பொருள் கலந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு இப்போது அவசர மாகப் பரிசோதனை செய்து பார்க்கச் சொல்லியிருக்கிறோம். குடல் புண்ணாகி ரணமாகி விட்டது. வெறும் மஞ்சள் தூளாக மட்டும் இருந்தால் இந்த அளவிக்கு ஏற்பட்டிருக்காது. மஞ்சள் தூளில் கலப்படப் பொருள் சேர்த்திருக்கலாம்.

என்னும் வரிகளின் மூலம் ஆசிரியர் உணவுப் பொருளில் கலப்படம் செய்யப்பட்டுள்ள கருத்தை சமுதாயத்திற்கு ஆணித் தரமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

**லஞ்சம்**

மனிதன் மனிதனாக வாழாமல் பணத்தை மட்டுமே குறிக் கோளாக கொண்டு வாழ்கிறான். அதனால் பல ஆசைக்கு ஆளாகப்படுகிறான். இதன் விளைவாக லஞ்சம் வாங்க துணிகிறான். இந்த லஞ்சம் பல நடுத்தர மக்களின் வாழ்க்கையை பாதிக்கின்றது. வானமா பூமியா என்னும் நாவலில் காந்தி பொருளாதார பாடத்தில் முதல் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றிருந் தாலும் வேலை இல்லாமல் இருந்து வந்தான். ஒரு நாள் அரசு அலுவலகத்தில் இருந்து கடிதம் வந்தது. ஆனால் அந்த வேலையோ ஏழாயிரம் ரூபாய் கொடுத்தால் உடனே வேலை என்று கேள்விப்பட்டவுடன்

காந்தியின் அண்ணன் தம்பியின் நலனை கருத்தில் கொண்டு பணத்திற்காக ஏற்பாடு செய்ய நினைத்தார். காந்தியோ என்னுடைய திறமைக்கு கிடைக்காத வேலை எனக்கு வேண்டாம் என்கிறான்.

தன் தந்தை காட்டிய வழியியே
சிறந்த வழி என்பதை ஆசிரியர்
எந்த வேலையிலிருந்தாலும்
லஞ்சம் வாங்கதீங்க:

லஞ்சம் வாங்கறவன் ஏழைகளோட
வயித்திலே அடிக்கிறவன்:
அப்புறம்

லஞ்சம் குடுக்க வசதியுள்ள
பணக்காரன் மட்டும்ந்தான் இந்த
நாட்டிலே வாழ முடியும்.ஏழைகள்
இல்லாத நாட்டை உருவாக்கவே
முடியாது!

என்ற கருத்து மக்களின் நலனுக்காக இந்த அரசு செயல் பட வேண்டுமே தவிர அவர்களின் நலனைக் கெடுப் பதற்காக அல்ல. லஞ்சத்தால் பணக்காரன் என்றுமே பணக் காரனாக வாழ்கிறான். ஏழை எப்பொழுதும் அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியால் இருப்பதை இந்நாவல் மூலம் சமுதாயத்திற்கு சுட்டிக்காட்டி யுள்ளார்.

## முடிவுரை

அகிலன் அவர்கள் தம் படைப்புகளை சாதாரண மனிதர்கள் முதற்கொண்டு இலக்கியவாதிகள் வரை அனை வரின் இதயங்களையும் தொடும் வண்ணம் படைத் துள்ளார். சமுதாயம் என்பது அனைத்து மக்களும் சேர்ந்து வாழ்கின்ற ஒரு அமைப்பு. சமுதாயத்தில் மனிதர்களின் நடத்தையை மாற்றக்கூடிய சக்தி காதலுக்கு உண்டு என்பதை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயக்கப் படுகிறது. அத்தகு திருமணம் ஆனந்தி என்ற பெண்ணுக்கு பொருந்தாத் திருமணமாக அமைந்துள்ள விதத்தை சுட்டிக் காட்டி யுள்ளார். சில நல்ல உள்ளம் கொண்டவர்களால் தான் சமுதாயம் முன்னேற்றம் அடைகிறது என்பதையும் விளக்கியுள்ளார். உணவு மனித வாழ்வில் இன்றியமையாத ஒன்று அத்தகு உணவுப் பொருளில் கலப்படம் செய்யப் பட்டுள்ள விதத்தை கடுமையாக சாடுகிறார். வறுமையும் ஊழலும் எவ்வாறு சமுதாயத்தில் நிலவிக் கொண்டு இருக்கிறது என்ற கருத்தை மக்களுக்கு உணர்த்தும் வகையில் அகிலன் தன் படைப்புகளின் மூலன் வெளிப் படுத்தியுள்ளார்.

♦

# வேலப்பாடி வேல்விழி நாவலில் பெண்தெய்வ வழிபாடு

**பொ. செந்தில்குமாரி**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, (தன்னாட்சி),
சேலம் 16.

**பெ**ண்ணைத் தெய்வமாக மதித்து போற்றும் நிலை தமிழகத்தில் பண்டைய காலத்தில் இருந்தே நிலவி வந்திருக்கிறது. நாகரிகங்கள் நதிக்கரைகளில் தோன்றிய காலத்தில் இருந்த சமூக அமைப்பு பெண்களை முதன்மையாகக் கொண்ட தாய்வழி சமூகமாகவே இருந்து வந்தது. தொடக்கத்தில் மனிதன் வேட்டையாடி உணவைச் சேகரிக்க வேண்டியிருந்த காலத்திலும், அதை தொடர்ந்து வேளாண் தொழில் காலத்திலும் இந்த இரண்டையும் பெண்கள் தான் செய்திருக்கிறார்கள் உயிரை உருவாக்குபவளாக மட்டுமல்லாமல் தன் சுற்றத்திற்கு உணவைச் சம்பாதித்து கொடுத்து காப்பவளாக இருந்த பெண்களை மக்கள் வழிபாட்டு நிலைக்கு உயர்த்தியதில் யாதொரு வியப்பும் இருக்க முடியாது.



தமிழகத்தைப் பொறுத்த வரை பண்டைய இலக்கண நூலான தொல்காப்பியத்திலேயே கொற்றவை வழிபாடு குறிக்கப் படுகிறது. வீரர்கள் வணங்கும் தெய்வமாகக் கொற்றவை தேவி இருந்து இருக்கிறார். தமிழர் தெய்வத்தின் பழைமையைக் குறிக்கிறது. ஆய்வாளர்களால் தமிழர் நாகரிகமாக அடையாளப் படுத்தப்படும் சிந்துச் சம வெளியில் தாய்த்தெய்வமாகக் கருதப்படும் சுடுமண் வடிவங்கள் கிடைத்துள்ளன. இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் கூறும் செய்தி களிலிருந்து அக்காலக் கட்டத்தில்

தமிழ்நாட்டில் கொற்றை வழிபாடு சிறப்பான நிலையில் இருந்தமையைக் காட்டுகிறது.

உமையாகிய தெய்வத்தைச் சிலப்பதிகாரத்தில் மூன்று இடங் களில் மட்டும் குறிப்பிடும் இளங்கோவடிகள் அதே காப்பியத்தில் பத்தினி கலாச்சாரம் எனப்படும் பத்தினி வழி பாட்டையும் விவரிக்கின்றார். சேர அரசரான செங்குட்டுவன், பத்தினி தெய்வமான கண்ணகிக்கு இமயத்திலிருந்து கல்லெடுத்து சிலைசெய்து கோயில் அனைத்தையும் சிலப்பதிகாரம் கூறுகிறது. இவ்வாறு கற்பிற் சிறந்த மகளிரும் வழிப் பாட்டிற்குரியவர் ஆனார். சேர நாட்டிலிருந்து இந்த பத்தினி தெய்வ வழிபாடு, வெற்றிவேல் செழியன் என்ற பாண்டிய இளவரசனால் முதலில் பாண்டிய நாட்டிற்கும், பின்னர் கொங்கு நாட்டிற்கும் பரவியது. சோழ அரசரான பெருநற்கள்ளி கற்பின் தெய்வத்திற்குக் கோயில் எழுப்பி விழாக்கள் எடுத்துள்ளார். இராசாவளி குறிப்பிலிருந்து கசபாகு என்ற இலங்கை அரசர் பத்தினி தெய்வ வழிபாட்டு முறையை இலங்கையில் அறிமுகப்படுத்தியது என்று தெரிய வருகிறது. இலங்கை அகழ்வாய்வில் பல பத்தினி தேவிகளின் உலோகபடிமங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இன்றும் கேரளாவில் பத்தினி தெய்வ வழிபாட்டினை அடுத்து வளர்ந்த பகவதி வழிபாட்டிற்கு அதிக முக்கியத்துவம் இருக்கிறது.

வேலப்பாடி வேல்விழி நாவலில் இடம்பெறும் பெண் தெய்வ வழிபாடு குறித்து ஆசிரியர் சோதிவாணன் அவர்கள் விளக்கியுள்ளதை கீழ்கண்ட செய்திகள் மூலம் அறிய முடி கிறது. வேல்விழி தன் தாயின் சுரத்தை போக்கிய சிவனுக்கு கோயில் அமைப்பதற் காக அவளுடைய வளர்ப்பு யானை மற்றும் சிலர் உதவியுடன் கல் எடுப்பதற்க்காக மலையனுர் செல்கிறாள். அப் பொழுது எதிர்பாரத விதமாக சம்புவராயர் குலத்தை சேர்ந்த மல்லிநாதன் என்பவரை பார்கிறாள். காதல் வயப்படுகிறாள். மல்லிநாத னோ நாட்டை எதிர் மன்னனிடம் காப்பாற்றுவதற்காக செல் கிறான். அப்பொழுது வேல்விழி யிடம் போர் முடிந்தவுடன் திரும்பி வருவதாக வாக்கு கொடுத்து செல்கிறான்.

பிறகு அவன் பயணம் காரணமாக வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டு வாழ தொடங்குகிறான்.ஆனால் வேல்விழியோ, மல்லிநாதனை மட்டும் தன் நினைவில் நிறுத்தி கண்களைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து வருகிறாள். ஆண்டுகள் பல கழிந்தன. மீண்டும் மல்லிநாதனுக்கு வேல்விழியை

சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இறைவனுக்கு கோயில் எழுப்பும் வேலையில் ஈடுபட்டு கொண்டிருக்கிறாள். அத்துடன் மீண்டும் வந்து மணம் செய்து கொள்வேன் என்று வாக்கு கொடுத்தான் மல்லிநாதன். அவனுடைய வரவுக்காக காத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் காலத்தின் சூழ்நிலைக் காரண மாக மல்லிநாதன் வேறு நாட்டு அரசியை திருமணம் செய்து இரு மகன்களுடன் வாழ்ந்து வருகிறான். இதை அறிந்த வேல் விழியோ, மன இறுக்கத்துடன் விடை பெறுகிறாள்.

மல்லிநாதனின் வரவுக்காக வே காத்திருந்த வேல்விழியின் கனவு தகர்ந்த்து. பின்னர் வேல்விழிக்காக மல்லிநாதன் ஆயிரக்கணக்கான சிவன் கோயில்களை உருவாக் கினார் என்பது வரலாறு. தீமையை அழிக்கும் தெய்வமாகக் காளியை வழிபட்ட தமிழர்கள், தன் தூய்மையையும், கற்பையும், உலகிற்கு காட்டும் வண்ணம் அன்றைய சமூக வழக்கமாக இருந்த சதி முலம் தன்னையே அழித்து கொண்ட பெண் களையும் சதிக்கற்கள் நட்டு வழிபட்டு இருக்கிறார். தமிழகத்தின் தென் மாவட்டங் களில் இந்தச் சதிகற்கள் வழிபாடு பரவலாகக் காணப்படுகிறது. சோழர்களின் கீழ் அரசாளத் தொடங்கினர். பின்பு பாண்டியர் களின் கை ஓங்கிய போது அவைகளின் கீழ் சிற்றரசர்கள் நாட்டை ஆண்டு வந்தனர். அவர்களுள் குறிப் பிடத்தக்கவன் மல்லிநாதன் என்பவன் ஆவான். வட ஆர்க்காடு மாவட்டம் போளூர்க்கு வடக்கே அமைந்த படைவீடு என்னும் ஊரை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த சோழர்கள் கீழும் பாண்டியர்கள் கீழும் சிற்றரசராக இருந்து ஆட்சி புரிந்தவன் சம்புவராயர் குலத்தைச் சேர்ந்தவன் திருமல்லிநாதன் என்பவன். இவர்களை கேரள அரசின் படை வெற்றி கொண்ட நாட்டை ஆள, பாண்டியர்களும் சிற்றரசர்களுமான மல்லி நாதனும் தலைமறைவாகக் காட்டில் வாழ்ந்து வருகின்றனர். பின்னர் தன் மேலான் மன்னர் களான பண்டியர்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வீறு கொண்ட இளஞ்சிங்கம் மல்லிநாதன் காகத்திய மன்னன் பிரதாப உருத்திர தேவராயரிடம் படை உதவி பெற விரும்பி னான். அதற்காக பாண்டிய மன்னர்களின் கையொப்பமிட்ட மடலப் பெற்றுக் கொண்டு புறப்பட்டான். இதையறிந்த ஒற்றர்கள் கேரள மன்னனிடம் தெரிவிக்க மன்னனோ எதிரிகளை அழிப் பதற்காகவே சிறு வயது முதல் ஒரு பெண்ணை பாம்பின் நஞ்சு கொடுத்து வளர்த்து வருகிறான்.

அஞ்சானட்சி என்னும் பெயர் கொண்ட அப்பெண் மல்லிநாதனுடன் உறவு கொண்டு அவனைக் கொல்ல வேண்டும் என்பது அரசனின் ஆணை.அதன்பின் அவனைப் பிறந்தமேனியாக்கி அவனுடைய கைகால்களைக் கட்டி அவனை அடையுமாறு அஞ்சனாட்சியை அனுப்புகின்றான். ஆனால் மனித நேயம் கொண்ட அவள் தனக்கு வரும் ஆபத்தை அறிந்தும் தனது உயிரை பொருட்படுத்தா மல் தன் அடர்ந்த கூந்தலை அறுத்து கோவணம் போல் கட்டி மல்லி நாதனை காப்பாற்றி அனுப்பி வைத்ததன் மூலம் அவளுடைய நல்ல குணங்களை அறிந்த மல்லிநாதன் அஞ்சனாட்சிக்கு அவள் பிறந்த ஊரின் திருக்கச் சூரில் கோயில் எழுப்பி பெருமைப்படுத்திய விதத்தினை அறியமுடிகிறது.

வேல்விழி என்னும் மங்கை மல்லிநாதனை காப்பாற்றி கடைசி வரை மல்லிநாதனையே நினைவில் கொண்டு கற்புக்கரசி யாக வாழ்கிறாள். இறுதியில் மல்லிநாதனை வெடிவைத்துக் கொல்லும் எதிரிகளின் சூழ்ச்சியை அறிந்த அவள் எதிரிகளோடு தானும் அவ்வீட்டில் வெடி விபத்தில் மாய்ந்து விடுகிறாள் என்கின்ற செய்தியை ஆசிரியர் தம் நாவலில் வெளிப்படுத்தி யுள்ளார். இதன் மூலம் தன்னம் பிக்கை உடைய இரு பெண் களினால் சம்புவராயர்களின் குலம் தழைத் தோங்கியது என்ற உண்மையை உணரலாம். வேல் விழிக்கும் கோயில் எழுப்பி யுள்ளதன் மூலம் பெண்ணை தெய்வமாக போற்றும் நிலை தமிழகத்தில் பண்டையக் காலத்தில் இருந்து நிலவி வந்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது.

## முடிவுரை

தன்னை விட உயர்ந்த ஒரு சக்தியின் மீது மனிதன் கொண்ட அச்சமும் வியப்புமே தெய்வ வழிபாடு தோன்றுவதற்கு அடிப் படையாக அமைகிறது. இவ்வழி பாட்டாலும் ஆண் தெய்வங் களைவிட மக்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து வணங்கி வருகின்றனர். பெண்கள் செழிப்புக் குறியீடாக மதிக்கப் படுவதாலும் தாய்மைக்கு மன்னிக்கும் குணம் இருப்ப தாலும் பெண் தெய்வங்களை மிகுதியாக வணங்கப்படுகின்றன என்பதை வேலப்பாடி வேல் விழி நாவலின் மூலம் ஆசிரியர் சோதிவாணன் கூறியுள்ளதை அறிய முடிகிறது. அகிலன் நாவல்களில் சமுதாயம்

**அ. தீபா**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி
(தன்னாட்சி), சேலம் 16

♦

# வாழ்வியல் அறம்

முனைவர் **தி. ஆனந்தவள்ளி,**
தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி,
(தன்னாட்சி), சேலம் -16.

**த**மிழர்களின் வாழ்வியல் அறம் சார்ந்தே அமைந்திருந்தது. தமிழர்களின் வாழ்வில் அறம் என்பது வாழ்வில் ஒரு பகுதியாக இல்லாது வாழ்வே அறமாக இருந்தது. தன்பிள்ளை தன் குடும்பம் என்ற எல்லை கடந்து இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களையும் தன் சுற்றமாக என்னும் மாண்புடைய வர்களாக வாழ்ந்து வந்தனர்.

''பண்புடையன் பட்டுண்டு
உலகம் அஃதின்றேல்
மன்புக்கு மாய்வதுமான்''

என்பார் வள்ளுவர்

இல்வாழ்வில் தெய்வம், விருந்து, ஒக்கல் என்னும் பண்புகள் கொண்டவர்களாக தமிழர்கள் இருந்துள்ளனர். அச் சான்றோர்கள் நெறியில்' தான் இவ்வுலகம் உயர்ந்திருக்கிறது. அமிழ்தமே ஆனாலும் பகுத்து உண்ணுதலும், பழி என்றூல் அஞ்சுவதும் அவர்கள் வாழ்வாக இருந்தது.

பயணம் மேற்கொள்ளுபவர் கள் உணவு எடுத்துச் செல்லும் வழக்கம் அக்காலத்தில் இருந்த தில்லை. அவர்கள் செல்லும் ஊரையே நம்பியிருந்தனர். அக் காலச் சமூகம் விருந்தோம் பலை அறமாக போற்றியது. தன் மக்களுக்கு நாட்டின் மாண்பினை யும், அறிவினையும் ஊட்டிய தோடு மட்டுமின்றி அன்பினை யும், அதனால் பெறும் இன்பத் தினையும் எடுத்துரைத்தனர்.

உலகில் வாழும் உயிர்கள் அனைத்தினையும் ஓர் நிறையில் காணும் மனம் தமிழர்களுக்கு இருந்தது. வாழ்வில் ஏற்படும் அனைத்து நிகழ்வுகளுக்கும் தன் செயலே காரணம் என்பான். பெரியோரை வியத்தலும் இல்லை, சிறியோரை இகழ் தலும் இல்லை என்ற கட்டுப் பாடு உடையவனாக வாழ்ந்து வந்தான். வாழ்வில் நல்லது மட்டுமே எண்ணுதலும், செய்தலும் அவனுக்கு தெரிந்த தாய் இருந்தது. இன்பமும் துன்பமும் விரவியது வாழ்வு என்ற தெளிவு அவனிடம் இருந்தது. இன்னாத வாழ்விலும் இனியது கண்டு வாழும் மேன்மையை அவன் பெற்றிருந் தான். மூப்பும், பிணியும் நம்மைச் சாரும் முன்பே நல்லது செய்ய வேண்டும் என்ற

எண்ணம் கொண்டவனாக வாழ்ந்தான். நல்லது செய்ய இயலாவிடினும் அல்லது செய்யாதிருத்தல் நல்லது என்றிருந்தான்.

நாட்டின் சிறப்பு என்பது அந்நாட்டில் அமைந்திருக்கும் இயற்கை வளம் அன்று. மாந்தரின மனவளம் என்பது பழந்தமிழரின் நம்பிக்கை.' எண்ணுவதெல்லாம் உயர்வான தாக இருத்தல் வேண்டும் என்ற நோக்கத்தோடு வாழ்ந்தான். இவவுலகில் வாழும் மனிதர் களை துன்பத்திற்கு ஆளாக்குவது வறுமை. செல்வம் பெற்றதன் பயனே பிறர்க்கு ஈதல தான் என்று எண்ணி மகிழந்தான்'.

நன்றி கொண்டவர்களாகவே தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். நன்றி கொன்றவனாகவே என்றுமே தமிழன் வாழ்ந்தது இல்லை என புறநானூறு எடுத்துரைக்கிறது.

''செய்தி கொன்றோர்க்கு உய்தி
இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ''

எனச் செய்நன்றியை எழு பிறப்பும் எண்ணல் வேண்டும் என வலியுறுத்துகின்றார் புலவர்.

மானம் அழிந்தபின் வாழ்வதைவிட, சாதலே மேல் என்று கருதினர் தமிழர். மனசாட்சியை விட உயர்ந்த சாட்சி வேறு எதுவும் இருக்க இயலாது என்று எண்ணினர். நட்பு என்பதன் பொருள் உணர்ந்து பிறருக்கு எடுத்துக் காட்டாய் வாழ்ந்தனர்.

தனி மனிதர்களின் கூட்டமைப்பே சமுதாயம். குடும்ப வாழ்வும், சமூக வாழ்வும், ஒன்றையொன்று சார்ந்தே உள்ளன. மாந்தர்கள் நிறைவுடன்



**வாழ்வியல் அறம்**

வாழ வேண்டும். எனில் மக்கள், அரசு இரண்டும் திறம் நிரம்பிய தாக அமைய வேண்டும். விருந்து, ஈகை, வீரம், நன்றி, மானம், நட்பு என செம்மாந்த வாழ்வியல் வாழ்ந்த தமிழனின் வாழ்வியல் அறம் உலகம் போற்றும் உன்னத நிலையில் இருந்தது. இதனை விடுத்த இன்றைய தமிழன் எதைத் தேடுகிறான். வாழ்வியலே அறமாக அமைந்திருந்த சமூகத்தில் வாழ்வில் ஒரு பகுதியாக வேணும் அறம்சாந்து அமையுமா என்பது கேள்விக் குறியாக அமைந்து விட்டது.

♦

# பாரதி கண்ட
# கனவும் நனவும்




**தி.ந. அர்த்தநாரி,** எம்.ஏ., எம்.எஸ்.
**M.P. ஜெயக்கொடி,** பி.காம்.,
முதன்மை கல்வி அலுவலர் (ப.நி),
தலைவர், சேலம் சிலம்பொலி
முத்தமிழ் மன்றம்.

**ஏ**ழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை இங்கு.

வாழி கல்வி செல்வம் எய்தி மனம் மகிழ்ந்து கூடியே மனிதர் யாரும் ஒருநிரிர்ஸ - மானமாக வாழ்வமே... பாரதி

சேலம் தமிழ் சங்கத்தில் சென்று 17.12.2017 ஞாயிறு சி. தாமரைக்கொடி, ஆ.உ., நிகழ்த்திய சொற்பொழிவின் சிறப்பினைப் பற்றி எழுதும் முன் ஈரோட்டில் 11.12.2017 திங்கள் கிழமை பாரதி பிறந்தநாள் அன்று கொண்டு கலையரங்கத்தில் ஆன்மிகசுடர் S.K. மயிலானந்தம் தலைமையில், கறைபடியாத கரங்கள்கொண்ட பொது உடைமை கட்சி தலைவர் நல்லகண்ணு, ஈரோடு மக்கள் சிந்தனை பேரவை நிறுவனத் தலைவர் ஸ்டாலின் குணசேகரன், டென்மார்க் நாட்டினைச் சேர்ந்த புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் ஜீவக்குமார் முன்னிலையில் பேராசிரியர் பொற்கோ அவர்கள் தமிழகத்தின் மூத்த தமிழறிஞர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கு ''பாரதிவிருது'' வழங்கிய விழாவினைப் பற்றியும் ஒரு சில வரிகள் எழுதுவது (இந்த விழாவில் மட்டுமல்ல இனி தமிழகமெங்கும் நடக்கும் பாரதீ பற்றிய விழாக்களில் குறிப்பிடுவது சிறப்பாகும்.) என்பது எனது கருத்தாகும். பாரதி கடைசியாக ''மனிதனுக்கு மரணம் இல்லை'' என்று பேசிய கருங்கல்பாளையம் நூலகத்தில்

இருந்து ஈரோடு நகர் வழியாக சுமார் 1000 (ஆயிரம்) கல்லூரி உள்ள மாணவர்கள் ஜீவகுமார் ஏற்றிவைத்த வேளியுடன் ஒருவர் கொண்டு சென்று ஊர்வலமாக கலையரங்கத்தை அடைந்த காட்சி கண்கொள்ளாக் காட்சி யாக 20 ஆண்டுகளாக பாரதி பிறந்த டிசம்பர் 11ஆம் தேதி தமிழ்நாட்டில் மிகச்சிறந்த ஒரு தமிழ் அறிஞரைக் கொண்டு மக்கள் சிந்தனைப் பேரவை இவ்வாறு நடத்தி விருது மிகச் சிறப்புக்கு உரியதாகும். அன்று பாரதநாட்டு துணை ஜனாதிபதி மாண்புமிகு வெங்கையாநாயுடு அவர்கள் பாரதியின் தேசிய பாடல்களை ஒவ்வொரு மாநில பள்ளி பாடப்புத்தங்களில் இடம் பெற வேண்டும் என்று தலைமை தாங்கிய S.K.N. மயிலானந்தம் அவர்கள் குறிப்பிட்டது காதில் தேன் வந்து பாய்ந்தது போல் இருந்தது.




நீதிபதி முகமது ஸ்மாயில் அவர்களால் துவக்கப்பட்ட சென்னை கம்பன் கழகம்கூட செய்ய முடியாத ஒன்றினை மாதந்தோரும் ஒரு இலக்கியக் கூட்டம் நடத்தி சேலம் தமிழ்ச் சங்கம் பெருமை பெறுகிறது. தமிழகத்தின் மிகச்சிறந்த இலக்கிய சொற்பொழிவாளர் களில் ஒரவரான த. ராமலிங்கம் அவர்கள் முன்பொரு கூட்டத்தில் வாழ்த்தியுள்ளார்.

17.12.2017 அன்று ''பாரதி கனவும் நணளம்'' என்ற தலைப்பில் தி. தாரைக்கொடி அவர்கள் சொற்பொழிவு ஆற்றிட்ட இலக்கிய விழா சேலம் தமிழ்ச் சங்கத்தில் நடை பெற்றது. விழா துவங்கும் முன் பாரதியார் ''ஒளிபடைத்த கண்ணினாய் வாவா'' போன்ற இனிமையான பாடல்கள் ஒலி பரப்பப்பட்டது. காதுக்கு

இனிமையாய் இருந்தது. வழக்கம் போல் பளிச்சென வெண்நிற உடையில் என்றும் எப்போதும் புன்சிரிப்புடன் இருக்கும் எங்கள் சேலத்து திருநாவுக்கரசர் கூட்டத் திற்கு தலைமை தாங்கினார். தலைமை தாங்கிய சேலம் தமிழ்ச்சங்கத் தலைவர் சீனி, துரைசாமி அவர்கள் பாசமும் நேசமும் மிக்க அவையோர்களே என இலக்கிய ஆர்வலர்களை விழித்து உரையாற்றியது இனிமையிலும் இனிமை. மார்கழி பெருவிழாக்கள் தமிழக மெங்கும் நடைபெறுவதால் சென்னையில் வாழும் தமிழறிஞர்களை தொடர்பு கொள்வது குதிரை கொம்பாக இருந்த நிலையில் இராமலிங்கம் அவர்கள் பரிந்துரையால் செல்வி தி. தாமரைக்கொடி சொற்பொழி வைக் கேட்கும் பேறு நமக்கு இன்று கிடைத்தது.

வேறவேற்ப்புரை ஆற்றிட்ட செயல்மிக்க சேலம் தமிழ்சங்க செயலாளர் வரத விஜயக்குமார் அவர்கள் தமக்கேஉரிய எங்கிருந்து தான் இந்தச் சக்தியை இவர் பெறுகிறாரோ என வியக்கும் வகையில் பாரத தேசத்தை இன்று தாமரைக்கொடி இன்னும் சற்று நேரத்தில் நம்மையெல் லாம் தமது சொற்பொழிவால் ஆளப்போகிறார். இந்த தி. தாமரைக்கொடி என்று கூறி அனைவரையும் அசத்திவிட்டார்.

''அன்னசத்திரம் ஆயிரம் வேட்டனின் ஆங்கோர் ஏழைக்கு கல்வி அரளிப்பது புண்ணியமாம்'' என்று பாரதி சொன்னதற்கு ஏற்ப தலைவர் சீனி துரைசாமி அவர்கள் தமது ஆளுமைக்கு உற்பட்ட தமது மூன்று மேல் நிலைப் பள்ளி ஒவ்வொரு பள்ளியிலும் கல்வி பயினும் 25 மாணவர்களுக்கு ஆண்டுதோரும் உதவி வருவதையும் குறிப்பிட் டார்.

சொல்லின் செல்வன் தமிழ்ச் சங்க பொருளாளர் M.G.R. அவர்கள் ''அறிமுக உரை எனில் இப்படித்தான் இருக்கணும் என்பதற்கு உதாரண புருஷனாக இருப்பவர்'' எங்கள் வாழ்வும் வலமும் என்றும் மங்காத தமிழே சங்க முழங்கு'' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் எழுச்சிமிக்க பாடலுடன் தமது அறிமுகஉரையை துவக்கினார். பாரதி ஒரு துணிச்சலான கவிஞர். தையற்ச் சொல் கேளாதே என்ற அவ்வையார் சொல்லை மீறி நிவேதிதாவை தமது குருவாக பாரதி ஏற்றுக் கொண்டவர். கொல்கென காங்கிரசுக்கு மனைவி செல்லம்மாவை அழைத்துப் போகாத பாரதியைப் பார்த்து நிவேதிதா அவர்கள் உங்கள் வீட்டு பெண்ணிற்கே விடுதலை தராத (மனைவியை அழைத்துச் செல்லும் பழக்கம் எங்கள்

நாட்டில் இல்லை என பாரதியார் சொன்னார்) நாட்டிற்கு எங்கு விடுதலை பெறப் போகிறீர்கள் எனக் கேட்டதால் தான் பாரதி பெண்கள் விடுதலைக்கு பல கருத்துமிக்கப் பாடல்கள் பாடினார் எனக் குறிப்பிட்டார். பிரசித்தி பெற்ற சாலமன் பாப்பையா, ராஜா, பட்டி மன்றங்களில் பங்கு கொண்ட சொற்பொழிவாளர் இவர் என பாராட்டினார்.

தாமரைக்கொடி பேச்சை துவங்கிய உடனே மக்களின் வாங்க, சாப்பிடுங்க, உட்காருங்க குடிக்கிறீர்களா என பேசிடும் மொழி பண்பாட்டினை சிலா கித்துப் பேசினார். இந்தியாவில் வேறு எங்கும் தமிழ்ச்சங்க சாலை நாம் கண்ட தில்லை. தமிழ்ச் சங்க கட்டை இணைப் போடு அண்ணா நூலகம் என்ற வாசகசாலை இருப்பது நல்ல நூல்கள். நல்ல நண்பர்கள் என்ற நினைப்பை அனைவருக்கும் ஏற்படுத்துகின்றது.

பாரதியின் தந்தை சின்னசாமி அய்யர் பெரும் வணிகர். எந்திரங்களை பொருத்திடும் திறமைகொண்டவர். தன் மகன் சுப்ரமணிய பாரதி ஆட்சியாளரா வரவேண்டும் என்று உயர்கல்வி படிக்கவைத்தார். ஆனால் பாரதிக்கோ தாம் கவிஞனாக வரவேண்டும் என்ற நினைப்பே மேலோங்கி இருந்தது. வரவேற் புரையில் பாரத தேசத்தினை தாமரைக்கொடி ஆள்கின்றது. சொற்பொழிவுனால் இந்த தாமரைக்கொடி வந்துள்ள நம் இலக்கிய அன்பர்களை ஆளப் போகிறார் எனக் குறிப்பிட்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது என்றார். நான் 6-ஆம் வகுப்பு படிக்கையில் என்னை என்னவாக வரப்போகிறாய் என கோட்டால் வழக்கறிஞராக வேண்டும் என்பேன். நான் கவிதாவில் எலக்ட்ரானிக்ஸ் படித்து ஒரு வங்கியின் அலுவல ராகவும், ஒரு பேச்சாளராகவும் இன்று உங்கள் முன் நான் நிற்கின்றேன்.

வசதி படைத்த ஒரு அம்மாவை ஒரு முதியோர் இல்லத்தில் கண்டு பேசினேன். இரண்டு மகன்களில் ஒருவன் அமெரிக்காவில், இன்னொருவர் ஆஸ்திரிலேயும் இருக்கின்றனர். இவர்கள் இந்தியாவுக்கு வந்தால் அவர்கள் காஸ்மீர் செல்வர்கள். ஆனல் அம்மாவாகிய என்னை அழைத்துச் சென்றதில்லை. அமெரிக்காவில் உள்ளவரிடம் அலைபேசியில் பேசும்போது அப்பா சாப்பிடாயா? என்று கண்ணீர் வடித்தார். என் மகன் களை என்ஜினியர் ஆகணும்,

மருத்துவராக்கணும் என்று எண்ணி வளர்த்தேனோ தவிர நல்ல மனிதர்களாக்கணும் என்று எண்ணி வளர்க்காதது எனது பிழையே என்று கூறினார். செருப்புக் கடையில் செருப்பு வாங்க போன ஒரு பெண் மணியின் கால்களைத் தொடும் பொழுது அவரை ஒரு தெய்வ மாக பார்ப்பதாகவும், அவர் வீதியில் செல்கையில் ஒரு கோடி ரூபாய் கொடுத்தாலும் அவர் கால்களைத் தொட மாட்டேன் என கடையில் வேலைக்கார பையன் சொன்னதையும் என் சேவகன் என்ற பாட்டில் இவனை நான் பெறவே என்ன தவம் செய்தேன் பாரதி ஏங்குவதையும் மனம் நெகிழக் கூறினார். பாஞ்சாலி சபதத்தில் திரௌபதியை ஒரு வீரப்பெண்மணியாகவும், துயுலுரியும் சோகக் கட்சியில் பீஷ்மர் உட்பட சபையில் உள்ள அனைவரும் கோபப்படாமல் மௌனமாக பார்த்துக் கொண்டு இருந்ததையே பாஞ்சாலி மிகக் கடுமையாக சாடினார்கள் என அற்புதமாக படம்பிடித்துக் காட்டியுள்ளார் பாரதி என்றார். பரிசுப் பெற்ற பணம் ரூபாய் ஐநூரில் (500) புத்தகங்களை ரூ. 450க்கும் ரூபாய் 50க்கும் அரிசியும் வாங்கினார் பாரதி. திருவனந்தபுரம் மிருகக் காட்சி சாலையில் கூண்டில் இருந்த சிங்கத்தைப் பார்த்து நீ காட்டுக்கு ராஜா நான் இந்தப் பூமியில் கவிராஜன் என பாரதி பெருமையாகக் கூறினார். பூச் செடி கூட்டங்களைப் பார்த்து ரசித்தார். ‘காக்கை குருவி எங்கள் ஜாதி’ என அனைத்து உயிர் களையும் நேசித்தார். பாரதி ஒரு யுக புருஷன். தீர்க்கதரிசி, ஒரு சமுதாய சீர்திருத்தவாதி, பாரதியின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்கள் பல தந்தை பெரியாருக்கும் ஒரு வழிக் காட்டியாக இருந்தது எனக் கூறினால் அது மிகையல்ல. பாரதி கண்ட ஒரு சீர்திருத்தப் பட்ட சமுதாயமாக இந்திய சமுதாயம் மாறவில்லை. அவருடைய தமிழ்மொழிப் பற்றும், தமிழன் என்பதில் அவர் கொண்ட பெருமிதம் நாம் அனை வரும் கடைபிடிக்க வேண்டி யவைகளாகும். சமயத்துக்கேற்ற படி ஏற்றம் இறக்கம் காட்டி குரலில் எலக்ட்ரானிக்ஸ் பட்ட தாரியான இவருடைய பேச்சு கேட்பவர் நெஞ்சில் மின்சார மேற்றி அனைவரையும் சுறுசுறுப் பாக கேட்க வைத்தது.

வாழ்க தமிழ்!

♦

# சைகை வழித் தகவல் தொடர்பு



முனைவர் **ச. விஜயலெட்சுமி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
எத்திராஜ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
சென்னை-8.

## முன்னுரை

தகவல் தொடர்பின் வளர்ச்சி தொடக்கக் காலத்திலிருந்து மக்களின் அன்றாட வாழ்வில் சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. தொடக்கக் காலத்தை மரபுவழிச் சாதனங் களின் காலம் எனக் கூறலாம். அக்காலத்தில் அருகிலிருப் போரிடம் கண் அசைவினாலும், அங்க அசைவுகளினாலும், கூவி ஒலி எழுப்புவதன் மூலமும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

ஒன்றைப் பற்றி முறை யாகவும், முழுமையாகவும் சிந்திக்காத பழங்காலத்தில் தகவல் தொடர்பில் 'சைகை' அடிப்படைக் கருவியாக அமைந் திருந்தது. சைகை பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கியது. அதனையடுத்துக் குறியீடுகள் அறிமுகமாயின. குறியீடுகள் ஒவ்வொன்றும் வெவ்வேறான பொருள்களைப் பெற்றும் பொருட் புலப்பாட்டில் சிறப் புற்றும் காணப்பட்டன. அனைத்திற்கும் இயற்கையை நம்பி வாழ்ந்த மனிதன் தீ, புகை, கொடி, பறை, மணி, முரசு என்பனவற்றைத் தகவல் தொடர்புச் சாதனங்களாகக் கொண்டு கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டான். அவன் கருவிகள் இல்லாத இடத்துக் கிடைத்த இயற்கைப் பொருள் களையே தொடர்பிற்குப் பயன் படுத்திக் கொண்டான். தகவல் களைப் பரிமாறிக் கொள்ளும் போது வாய்மொழி இல்லாது நடந்த இத்தொடர்புதான் 'சொல் அல்லாத் தொடர்பு' எனப்பட்டது. இது கண்ணுக்கும், செவிக்கும் புலனாவது. இன்றளவும்

சமூகத்தில் இத்தொடர்பு பெரிதும் பயன்பட்டு வருகின்றது.

## சைகை

தொடக்கக் காலப் பரிமாற்றத்தில் ஒன்று சைகை. ‘சைகை’ என்பது உறுப்பசைவின் மூலம் ஒலியற்ற முறையில் கருத்தை வெளிப்படுத்துவது. ஒவ்வோர் அசைவும் ஒரு தகவலைக் குறிப்பதாக அமைந்துள்ளது. சைகை மொழி உடல் உறுப்புக்களின் அசைவின்மூலம் தொடர்பு கொள்ளும் கருவியாக விளங்குகிறது. முக அசைவுகளை வைத்து உணர்வு களைப் பரிமாறிக் கொள்ள மனிதனால் முடிந்தது. இந்தக் காலக்கட்டம், ‘மௌனமொழி’க் காலம் ஆகும்.

நம் வாழ்வில் இன்று சைகை ஒன்றிக் கலந்துள்ளது. மனிதன் வாய் திறந்து வார்த்தைகளைப் பேசாமல் தம் கண்களால் பலவற்றைக் கூறிவிடுகிறான். அதனால் இதயத்தின் இன்ப, துன்ப உணர்வுகளை வெளிப்படுத்தும் தகவல் கருவியாகச் ‘சைகை’ செயல்படுகிறது. மனித உடலுறுப்புக்களின் ஒவ்வோர் அசைவும் காண்பவர்களுக்குத் தகவலைத் தெரிவிப்பதாகவே அமைகின்றன.

சைகைத் தொடர்பு ‘தருநர்’, ‘பெறுநர்’ ஆகிய இருவருக்கும் இடையே நேரடியான தொடர்பினை ஏற்படுத்துகிறது. இவற்றின் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும்போது எவ்வித இடையூறும் ஏற்படுவதில்லை. கண்ணுக்குப் புலனாகும் அசைவுகளின் வெளிப்பாடு துல்லியமாகப் ‘பெறுநர்’ புரிந்து கொள்ளக் கூடியதாக அமைகிறது. சைகை உணர்த்தும் தகவல் பெறுநரிடம் ஒரு விளைவினையும் அதற்குரிய எதிர் விளைவினையும் ஏற்படுத்தி விடுகிறது. தகவல், அனுப்புநரிடமிருந்து பின்வருமாறு செல்கிறது.

அனுப்புநர் - ஊடகம் செய்தி
உடலசைவு கண்ணுக்குப்
பெறுநர் (சைகை)
புலனாவது

தொடர்பியல் என்பது ஒரு செயல் முறையாகும். இச்செயல் முறையில் அனுப்புநர், பெறுநர் எனும் இருவர் இடம் பெறல் வேண்டும். தொலை தூரத்தில் அல்லது அருகில் உள்ளவர்களிடம் கருத்தினைத் தெரிவிக்கச் சைகை பயன்படுகிறது. சைகையில் உடலுறுப்புக்களால் குறியீடுகள் வெளிப்படுத்தப் படுகின்றன. சைகை மொழியில்,

1. உடலசைவு (Body Language)

2. முகக் குறிப்பு (Facial Expression)

3. கண்ணசைவு (Eye Expression)

என்பன செயல்பாட்டிற்குப் (காண்க. இயல் 4.29) பயன் படுகின்றன. இவற்றின் இயக்கம் மெய்ப்பாடு ஆகும்.

தொல்காப்பியத்தில் மெய்ப் பாடுகள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. மன உணர்ச்சியின் வெளிப்பாட்டை 'மெய்ப்பாடு' என்பார் தொல்காப்பியர். சைகையே உள்ளத்தின் கண் தோன்றி உடலின் வழியாக வெளிப்படும் மெய்ப்பாடு ஆகும். மெய்ப்பாடு களை,

நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று

அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப

(தொல். பொருள் மெய். 3)

எனச் சுட்டிய தொல்காப்பியர் மன உணர்வினை எட்டு வகை களாகவும், அவை ஒவ்வொன்றும் நான்கு காரணத்தின் அடிப்படை யில் தோன்றுவதாகவும் குறிப் பிடுகின்றார். மெய்ப் பாட்டு உணர்வுகளைத் தொல்காப்பியர் முப்பத்திரண்டாகக் கணக் கிட்டுள்ளார். மெய்ப்பாடுகள் தோன்றுதற்குரிய காரணங் களைத் தொல்காப்பியம் பின் வருமாறு விவரிக்கின்றது.

நகை எள்ளல், இளமை, இகழ்ச்சியில்

பேதைமை, மடமை பிறக்கும்

அழுகை இளிவு, இழவு, அசைவு, அவலத்தில் (தளர்ச்சி) வறுமை, பிறக்கும் பிறரால் இழிவு படுத்தப்பட்ட நிலை இளிவரல் மூப்பு, பிணி, வருத்தம், இழிப்பிற் மென்மை (நலிவு) பிறக்கும் மருட்கை புதுமை, பெருமை, வியப்பில் சிறுமை, ஆக்கம் (உயர்வு) பிறக்கும் அச்சம் அணங்கு (தெய்வம்), அஞ்சத் தகுந்த

விலங்கு, கள்வர், இறை வற்றால்

(அரசன்) பிறக்கும் பெருமிதம் கல்வி, தறுகண்மை வீரத்தால்

(வீரம்), புகழ் கொடை பிறக்கும்

வெகுளி உறுப்பறை, வெறுக்கத்

குடிகோள், அலை, தக்கவற்றால்

கொலை பிறக்கும் உவகை செல்வம், புலன், சிருங்காரத்தால்

புணர்வு, அல்லது விளையாட்டு மகிழ்ச்சியால் பிறக்கும்

இவை மெய்ப்பாடுகள் தோன்றுதற்குரிய காரணங்கள் ஆகும். வெளிப்படுத்துவோரின் உள்ளக் குறிப்பைக் காண் போருக்குத் தெரிவிக்கும் நிலையில் இவை தகவல் தொடர்புகளாக அமைகின்றன. உள்ளத்தின் உணர்வு முகத்தில் வெளிப்படும் தன்மையை விளக்குவதாகவும், உணர்ச்சி களின் வெளிப் பாடாகவும் சைகை அமைகிறது. வாயால் வெளியிடப் பெறும் சொற்களைப் போலவே கண்கள் காட்டும் சைகையும் மொழியாவதைக்



கண்ணொடு கண்ணினை
நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்

என்ன பயனும் இல
(குறள்-1100)

என வள்ளுவர் கூறுகிறார். சைகையால் கருத்து வெளிப்படுத்தப் பட்டதை 'சீவக சிந்தாமணி'யின் கீழ்வரும் பாடல் வரிகள் உணர்த்தும்.

கையினால் சொல்லக் கண்களிற்
கேட்டிடும்
மொய்கொள் சிந்தையின் மூங்கை
(சீவக. 997)

இப்பாடல் கையும் கண்ணும் தகவல் தொடர்பு உறுப்புக்க ளாக அமைகின்றன என்பதைச் சுட்டும். கம்பரும்,

அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்

(கம்ப. பால. 514-4)

எனப் பாடியுள்ளார். மனித முகமானது உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் கருவி. பல சொற்கள் இணைந்து வெளிப் படுத் தும் கருத்தை நொடிப் பொழுதில் கண்கள் வெளிப் படுத்தும் திறத்தை மேற்கண்ட தொடர் குறிப்பிடுகின்றது. கண்களால் கதை மாந்தர்கள் பேசுவதை இலக்கியங்கள் சித்திரிகின்றன. கையினால் காட்டும் சைகையைக் கண்களால் தெரிந்து கொள்ளும் திறன் பேசவியலா ஊமையின் வழிச் சுட்டப் பெறுகிறது. முகப் பாவணைகளைப் பார்த்தே ஒருவரது மன நிலையினை அறிய புற உறுப்புக்களாகிய தலையும், முகமும் உதவுகின்றன. இப்புற உறுப்புக்கள் சைகை மொழிக்கு அடிப்படையாய் அமைகின்றன.

♦

# யாப்பிலக்கணத்தின் தோற்றமும் வளர்ச்சியும்




**ரா. சத்யா,**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
விவேகானந்தா கலை மற்றும்
அறிவியல் மகளிர் கல்லூரி,
நாமக்கல் (மாவட்டம்).

இலக்கியம் பலவாய் பல்கிப் பெருகி வளரத் தொடங்கிய காலத்தில் மொழியை ஒழுங்குபடுத்த எண்ணியோர் கண்ட முறையே இலக்கணம். இந்த இலக்கணம் முறையே எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகை உண்டு என்பர். இலக்கண நூல்களில்முதலில் தோன்றியது அகத்தியம். நமக்கு முதலில் கிடைத்த இலக்கணம் தொல்காப்பியம் என்பது அனைவரும் அறிந்ததே. தொல்காப்பியர் எழுத்து சொல்,பொருள் என்ற இலக்கணத்தை வகுத்தவர் என்பார்.

மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த என்பதால் இந்நூல் ஐந்திலக்கண நூல் என்பர. செய்யுளியலில் யாப்பு பற்றிய செய்தி உள்ளது. உவமவியல் அணி இலக்கணம் பற்றி கூறுகிறது. இது ஐந்திலக்கண நூல் என்பர். தொல்காப்பியத்திற்குப் பின்பு பல இலக்கண நூல்கள் தோன்றின. யாப்பிலக்கணம் குறித்து பாட்டியல் நூல்களிலும் அதன் செய்திகள் இடம்பெற்றுள்ளன. யாப்பின் தோற்றம் அதன் வளர்ச்சிப் பற்றி இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

**இலக்கணம்:**

கனத்தமிழ் துறையறி மறக்கலம் காதல்கூர்
கன்னிகா மடம் நன்னூல்
கடடுபொன் கொட்டாரம்,வாணிசிங் காதனம்
கவிநாட கம்செய் சாலை

என்னும் பாடல் இலக்கணத்தின் இன்றியமையாமையை சுட்டுகிறது. இலக்கியம் என்பது மக்களின் வாழ்க்கை என்னும் நன்செய் நிலமாகவும், இலக்கணமாவது மக்களின் வாழ்க்கையை வரையறையினைக் கொண்டு வந்து காக்கும் வேலியாகும்.

இலக்கண மொழியைப் பாதுகாப்பதோடு தமிழ்மொழியின் வளத்தினை அறிந்து தேடி வரும் ஆர்வலர்களுக்கு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, ஆகியவை இலக்கணத்தை அறிவதற்கு ஒரு தெப்பமாக விளங்குகிறது.

**இலக்கணம் வரையறை :**

இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்

என்னும்பாடல் இலக்கணத் தோற்றம் பற்றி கூறுகிறது.

இலக்கணம் என்னும் சொல் இலட்சணம் என்ற சொல்லின் சிதைவு என்பர். ஆனால் வட மொழியில் இலக்கணத்தை இலட்சணம் என்று கூறுவதில்லை. இலக்கு அணம் இலக்கணம் என்று தமிழ் மொழியில் கூறுகின்றனர். இலக்கணம் என்ற சொல்லை முதன் முதலில் வழங்கியவர் தொல்காப்பியர் இலக்கணம் என்றால் பல பொருளை உய்த்துணர்ந்து அவற்றின் இயல்பினை உள்ளவாறு அறிவித்தற்கு காட்டப்படும் வரையறை, புலம் என்னும் சொல் தமிழ் இலக்கணத்தைக் குறிக்கும் என்பர்.

புலம் தொகுத்தோனை போர்க்கறு பனுவல்

எனும் பனம்பாரனார் உரையைக் காட்டுவர்வேறு சிலர் இயல் என்பது இலக்கணத்தைக் குறிக்கும் தமிழ் சொல் என்பர்.

இவ்வாறு இலக்கணம் என்பதற்கு பல்வேறான கருத்துக்கள் இருந்துள்ளது.

### யாப்பு: விளக்கம்

யாப்பறி புலவர் என்று தொல்காப்பியர் சுட்டுவதால் யாப்பிலக்கண நூல்கள் தொல்காப்பியத்திற்கு முன்பே இருந்திருக்க வேண்டும் என்ற செய்தி அறியப்படுகிறது.

**எழுத்து அசை சீர் தலை அடிதொடை துக்கோடு**
**இழுக்கா நடையது யாப்புஎனப் படுமே**

என்னும் யாப்பின் உறுப்புக்களைகொண்டு யாக்கப்படுவதால் யாப்பு எனப்படுகிறது.

யா என்னும் சொல் யாத்தல் என்னும் செய்யுளைக் கட்டுதல், இயற்றுதல் எனும் தொழில் பெயர்கள் இருந்ததாக அகராதிகள் கூறுகின்றன.யாத்தல் என்னும் சொல்லிருந்து தோன்றியதே யாப்பு என்னும் சொல் கிரேக்கத்தில் மேட்டர் என்னும் சொல் அளவியல் என்னும் பொருளியலில் உள்ளது தொல்காப்பியரும் செய்யுளியல் உருபுகளுள் அளவியல் ஒரு உருபாகக் கூறியுள்ளார். அரிஸ்டாட்டில் யாப்பு ஒரு ஒளிநயம் (தூக்கு) என்று கூறுகிறார். தமிழ் இலக்கணம் யாப்பின் ஒரு உருபாக ஒளிநயம் என்பதைக் கூறுகின்றார். பாவோசையின் குறிப்பிட்ட வடிவமைப்பே யாப்பாகும் என்று ஆக்ஸ்போர்டு அகராதி பொருள் விளக்கம் அளிக்கிறது.முருகியல் உணர்ச்சிக்காக அமைக்கப்பட்ட ஒளிக்கூறுகளை அடிப்படையாக கொண்டு வரையறை செய்யப்பட்ட இலக்கிய மரபே யாப்பு என்று சேட் மேன் என்ற கவிஞர் கூறுகின்றார்.

**யாப்பு எனப்படுவது யாதென வினவின்**
**தூக்கும் தொடையும் அடியும் இம்மூன்றும்**
**நோக்கிற்றுஎன்ப நுணங்கியோரே**

என்று நல்லூர் நத்தத்தனார் கூறியுள்ளார்.யாப்பு என்பது ஒளிநயத்தை உள்ளிடாகக்கொண்டது என்றும்.தொடை என்னும் உத்தியாளும் அசை,சீர் போன்ற உருபுகளாலும்ஆக்கப்பட்டது என்பது இவ்வாய்வின் வாயிலாக அறியமுடிகிறது.

## தொல்காப்பியத்திற்கு முன் யாப்பிலக்கணம்

*தமிழ்இலக்கணத்தில் யாப்புதொடர்பான இலக்கண நூல்களில் காலத்தால் முந்தயது தொல்காப்பியம் தொல்காப்பியத்திற்கு முன் யாப்பிலக்கணம் குறித்த நூல்கள் இருந்தன என்பதை*

நல்லிசைப் புலவர் செய்யுள் உனுப்பென
வல்லிதிற் கூறி வகுத்தாரைத் தனரே (தொல்-310)

யாப்பென மொழிய யாப்பறிபுலவர் (தொல் -383)

நூல்நவில் புலவர் நூவன்றறைந் தனரே (தொல்-422)

என்மனார் புலவர் (தொல்-457)

*என்னும் நூர்பாக்காளால் அறியமுடிகிறது.*

## அகத்தியம்

*அகத்தியர் செய்ததால் தொல்காப்பியத்திற்கு முன்பு அகத்தியம் என்றொரு நூல் இருந்தது என்ற செய்தியையும் அறிய முடிகிறது. இன்று அகத்தியம் முழுநூலும் கிடைக்கவில்லை. தொல்காப்பிய இளம்பூரணர் உரை யாப்பருங்கல விருத்தியுரை ஆகியவற்றில் சில நூற்பாக்கள் மேற்கோளாக கிடைத்துள்ளது. இதுபோன்று செயன் முறை செயிற்றியம் என்னும் இரு நூல்கள் குறித்த செய்தி தொல் காப்பிய இளம்பூரணர்,பேராசிரியர் உரைகளில் காணப்படு கிறது.*

*அகத்தியம், செயன்முறை, செயிற்றியம் என்னும் மூன்று நூல்களும் இணைந்து யாப்பருங்கலம்.83 ஆவது நூற்பா சுட்டுகிறது இதன்மூலம் தொல்காப்பியத்திற்கு முன் பல இலக்கண நூல்கள் இருந்ததை அறியமுடிகிறது.*

## தொல்காப்பியம்

*தொல்காப்பிய செய்யுளியல் முதன் முதலில் யாப்பு பற்றி செய்தி கூறும் நூலாக உள்ளது. தொல்காப்பியர் காலத்தில் செய்யுளியலை தனி அதிகாரமாக கூறவில்லை பேராசிரியர் உரையில் யாப்பதிகாரம் என ஒரு தனி அதிகாரமாக கூறியுள்ளதை தொல் நூற்பா 313 கூறுகிறது.அகத்தியத்தின் வழி நூலாக யாப்புக்குறித்த பல நூல்கள தோன்றினாலும் தலைமை நூலாக முற்காலத்தில் கூறப்பட்ட நூல் தொல்காப்பியம் இக்கருத்தை தொல் மரபியல் நூ 109 உறைக்கிறது*

தனக்கு முன் இருந்த யாப்பிலக்கண கருத்துகளை ஏற்று தனக்கு பின் தோன்றியது எல்லா யாப்பு வடிவங்களுக்கும் நிலைக்களனாக அமைந்த நூல் தொல்காப்பியம்.

**மகாபுராணம் பூதபுராணம்**

மகாபுராணம் பூதபுராணம் என்னும் இரு நூல்களும் யாப்பு பற்றி கூறுகிறது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, சந்தம், வழக்கியல், அரசியல், அமைச்சியல், பார்ப்பனவியல், சோதிடம், கந்தருவம், கூத்து போன்ற பல இலக்கண பகுப்புகள் பற்றி கூறுகின்றது என்ற செய்தியை தொல், எழுத்து நச்சினார்க்கினியர் சிறப்பு பாயிரம் பா. 100 ல் இதைப் பற்றி அறியமுடிகிறது.

இதன் மூலம் யாப்புக்கு மட்டும் இலக்கணம் கூறும் நூல் இல்லை என்பதை அறிய முடிகிறது.

**அவிநயம்**

யாப்பருங்கால விருத்தியில் அவிநயம் என்னும் நூலிலிருந்து பல நூற்பாக்கள் மேற்கோளாக உள்ளது. தொல்காப்பியம் போல இந்த நூலும் ஐந்திலக்கணம் பற்றிய கருத்தினை எடுத்துரைக்கின்றது என்பதால் ஐந்துவகை இலக்கணப் பகுப்பு உடையதாக இருக்கலாம். தற்போது கிடைத்துள்ள அவிநய நூற்பாக்களை தொகுத்து தனி நூலாக வெளியிட்டுள்ளனர்.

**நாலடி நாற்பது**

அவிநயத்திற்குப் புறநடை நூலாக இயற்றப்பெற்றது நாலடி நாற்பது. இந்நூல் வெண்பாவால் பாடப் பெற்றது. அவிநயம் யாப்பிற்கு நாலடி நாற்பது போல என்று யாப்பருங்கலக் காரிகை பாயிர உரையில் குணசாகரர் குறிப்பிடுவதால் அவிநயர் அமைத்த யாப்பு நூலுக்கு நாலடி நாற்பது புறநடையாக அமைந்தது. மாணவர்களுக்கு யாப்பிலக்கணத்தை எளிமையாக்கும் நோக்கத்தில் இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம். இதனைப் பாடியவர் நாலடி நாற்பது உடையார் என்றும் கூறுவர்.

**மயேச்சுரர் யாப்பு**

மயேச்சுரர் என்பவர் இயற்றியதாக மயேச்சுரர் யாப்பு என்னும் நூல் விளங்குகிறது. இந்நூலிலிருந்து நூற்பாக்கள் விருத்தியுரை

ஆசிரியரால் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றுள்ளன. மேலும் விருத்திரையாசிரியர் இவரை மயேச்சுரர், மகேச்சுரர், மகேச்சுரனார் என்று பல்வேறு நிலையில் குறிப்பிடுகின்றார்.

நீர் மலிந்த வார்சடையோர் போர் மகிழ்ந்த பேராசிரியர், பிறை நெடுமுடிக் கறைமிடற்றனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுள் திருப்பெயர் மகிழ்ந்த தொன்நூர் கவிஞர், யாப்பருங்கலம் 27, 83 வது நூற்பாவில் மயேச்சுரரைப் பற்றி குறிக்கின்றனர். இவ்வாறு இவர் பலமுறைக குறிப்பதால் விரித்தியுரை ஆசிரியர் இவருடைய மாணவராக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். என்று இளங்குமரன் இலக்கண வரலாறு

ப 201ல் குறிப்பிடப்பட்டுள்ளது. தொல்காப்பியத்திற்கு பின்னர் கலிப்பாவிற்கு விரிந்த யாப்பிலக்கணம் கூறிய நூல் மயேச்சுரர் யாப்பு என்று கூறலாம்.

## கையனார் யாப்பு

கையனார் இயற்றிய நூல் கையனார் யாப்பு எனக் கூறப் பெருகின்றது. இந்நூலுக்கு இவர் உதாரணம் காட்டி உரை எழுதி யிருத்தல் வேண்டும் என்றும் இந்நூற் கருத்துக்கள் தொல்காப்பியர் கருத்துகளோடு ஒப்ப நடப்பன என்றும் கூறப் பெறுகின்றது.

## நல்லாறனார் மொழி வரி

நல்லாறனார் என்ற பெயர் நல்லாதனார் என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளது. இடைச்சொல்லும் உரிச் சொல்லும் தொல்காப்பியம், தக்காணியம், அவிநயம், நல்லாறான், மொழிவரி முதலியவற்று காண்க.

என்று விரித்தியுரையில் சுட்டப்படுவதால் மொழி வரி; என்னும் நூலினை நல்லாறனார் இயற்றியிருத்தல் வேண்டும் எனலாம்.

## செய்யுளியல் உடையாரின் நூல்

யாப்பிலக்கணத்தைச் செய்யுளியல் எனக் கூறுவது பழைய மரபாகும் தொல்காப்பியர் தம் கூறும் யாப்பிலக்கணச் செய்திகளை கூறும் இயலை செய்யுளில் என்று வழங்குகிறார்.யாப்பருங்கல ஆசிரியர் செய்யுளில் உடையார் என்று ஒருவரை குறிப்பிடுகின்றார், தொல்காப்பியச் செய்யுளியலில் கட்டுரை வகையில் என்னும்

நூற்பாவினை எடுத்துத் காட்டி இவ்வாறு செய்யுளியலில் உடையார் ஓதிய பெற்றியால் வருவன என்றார் என்று விருத்துரையில் உள்ளது. இங்கு செய்யுளியலில் உரையார் என்பது தொல்காப்பியரைக் குறிக்கிறது.

நேரிசை வெண்பா இனவெழுத்து மிக்குவரின் வெண்பா எனப்படும் என்று இன்னிசை வெண்பாவினை அகவல் வெண்பா என்று செய்யுளியல் உடையார் கூறுவர் எனலாம். எனவே செய்யுளியல் உடையார் என்னும் பெயரில் இருவர் இருந்ததை அறியலாம்.

**பல்காயம்**

பல்காயனாரால் எழுதப்பெற்றதாக பல்காயம் என்னும் யாப்பிலக்கண நூல் விளங்குகிறது. தொல்காப்பியர் விரித்துக் கூறியவற்றை பல்காயனார் பகுத்துக் கூறியுள்ளார்.

தொல்காப்பியப் புலவோர் தோன்ற விரித்துரைத்தார்.

பல்கா ய னார்பகுத்துப் பண்ணினார் நல்யாப்புக்
கற்றார் மதிக்கும் கலைக்காக்கைப் பாடினியார்
சொற்றார் தம் நூலுள் தொகுத்து

(யாப்பரு-உரை-130)

என்னும் வெண்பா தொல்காப்பியர் விரித்துக் கூறியதை பல்காயனார் பகுத்துக் கூறினார். இதனைக் காக்கைப் பாடினியார் தன் நூலில் தொகுத்துக் கூறியுள்ளார் என்று யாப்பருங்கலம் நூற்பா கூறுகிறது. இதனால் பல்காயனார் காக்கைப் பாடினியாருக்கு காலத்தால் முற்பட்டவர், இவர் மதம் பல்காயனார் மதம் எனப் பெறும்.

**சங்க யாப்பு**

இந்நூலாசிரியரின் பெயர் தெளிவாகத் தெரியவில்லை. விருத்தியுரையாசிரியர் சங்கயாப்புடையார் என்று இந்நூலாசிரியரை குறிப்பிடுகிறார். கழிநெடிலடியால் வரும் பாவினங்களைச் சங்க யாப்பில் கண்டு கொள்க என்று விருத்தியுரையாசிரியர் கூறுவதால் இந்நூல் இலக்கணம் கூறி இலக்கியம் காட்டியுள்ளது. பாவினங்கள் குறித்தும் சங்க யாப்பு கூறியுள்ளது என்பதை அறிய முடிகிறது.

## வாய்ப்பியம்

வாய்ப்பியனார் எழுதிய நூல் வாய்ப்பியம் இந்நூல்லாசிரியரை விருத்தியுரையாசிரியர் வாய்ப்பியனார், வாய்ப்பியமுடையார் எனக் குறிப்பிடுகிறார்.

மதுவிரி வாகையும் பாடாண் பாட்டும்

பொதுவியற் படலமும் புறமா கும்மே (யாப்பு நூ 96)

என்பதால் பொருளிலக்கணம் வாய்ப்பியத்தில் கூறப்பெற்றிந்தது என்பதை உணரலாம்.

சீரினும் தளயினும் சட்டக மரபினும்

பேரா மரபின பாட்டெனப் படுமே (யாப்பு நூ 96)

இதன்மூலம் யாப்புகுறித்து செய்திகளும் வாய்ப்பியத்தில் இருந்திருக்கும் என்பதை உணரலாம்.

நைவளம் காந்தாரம்

பஞ்சுரம் படுமலை மருள் அயிர்ப் பரற்றும்

செந்நிறம் எட்டும் குறிஞ்சி யாழ்த் திறனே (யாப்பு நூ 96)

என்பதால் இசைகுறித்தும் வாப்பியம் இலக்கணம் வகுத்துள்ளதை உணரலாம்

## காக்கைப் பாடினியம்

காக்கைப் பாடினியர் என்ற பெயரில் பல புலவர் இருந்திருகின்றனர் அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் காக்கைப் பாடினியர் என்பவர் ஒருவர் காக்கைப் பாடினியார் நச்செள்ளையர் என்ற பெண்பாற் புலவர் குருந்தொககையில் ஒரு பாடலும் பதிற்றுப்பதில் ஆறாம்பத்தும் படியுள்ளர் இவ்விருவரில் வேறாக மற்றொரு காக்கைப் பாடினியர் இருந்திருக்க வேண்டும். காக்கைப் பாடினியாரின் யாப்பியல் கொள்கைகள் காக்கைப் பாடினியர் மதம் என்று வழங்கப்பட்டது.

எழுதெண்ணித் அடிவகுக்கும் பழைய மரபு இவர் காலத்தில் நிலைபெறவில்லை. சீரெண்ணி என்னும் மரபினை இவர் ஏற்றவர். காக்கைப் பாடினியார் காலத்தில் பாவினம் குறித்து மூன்று

கருத்துகள் நிலவின என்பதை யாப்பருங்கல விருத்தியுரையால் அறியமுடிகிறது.

## வடமொழி வழி தமிழ் யாப்புக் கருத்துகள்

வட நூல் வழிச்சந்தம் முதலான வற்றையும் பாவினத்தில் அடங்குவர் தொல்காப்பியர் கூறும் கருத்தை மட்டும் ஏற்போர்.

காக்கைப் பாடினியரின் நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை எனினும் கிடைத்துள்ள நூற்பாக்கள் தமிழ் யாப்பியலில் தொல் காப்பியருக்குப் பிறகு ஏற்பட்டுள்ள மாற்றங் களைக் குறிக்கும் வகையில் அமைத்துள்ளது.



## சிறுகாக்கைப் பாடினியம்

காக்கைப் பாடினியர் வேறு இவர் வேறு காக்கைப் பாடினியாரின் கருத்துகளைக் ஏற்றும் தம் காலத்திற்கேற்ற கருத்துகளைக் சேர்த்தும் இவர் நூல் இயற்றினார்.

## யாப்பருங்கலம்

யாப்பு குறித்து பல கருத்துகளைக் விளக்கி கூறும் யாப்பருங்கலம்

**சொல்லிற் சுருங்கிப் பொருள் பெருகித் தொன்ஞானம்**
**எல்லாம் விளக்கி இருளகற்றும் நல்யாப்**
**பருங்கலம் வல்லவர் தாமன்றே கேள்வி**
**ஒருங்கலர்ந்த வல்லோர் உணர்ந்து**

என்பது விருத்தியுரையின் கீழ்க்காணப்பெறும் வெண்பாவாகும் பல்வேறு பொருள் பெருகும் படியாகக் சுருங்கிச் சொல்லியுள்ள யாப்பருங்கல விருத்தியுரையில் யாப்பருங்கலம் பற்றி விரிவாக ஆராயப் பெறுகின்றன

## யாப்பருங்கலக் காரிகை

யாப்பருங்காலத்தின் புறநடையாக அதே ஆசிரியாரல் இயற்றப்பட்டது யாப்பருங்கலக் காரிகை புறநடை என்பது முதல்

நூலுக்கு அங்கமாகக் செய்யப் பெறுவதால் யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் காரிகையினை

யாப்பருங்கல புறநடை என்றே கூறுவர் யாப்பருங்காலதினை போலவே காரிகையும் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்று மூன்று இயல்களையும் 59 காரிகை பாக்களும் உள்ளது. தற்சிறப்புபாயிரம் மூன்று காரிகை, உரைசூத்திரக்காரிகை 12 ம் அடங்கும்.

மேலும் இதுபோன்று பல நூல்கள் யாப்பு பற்றிய செய்திகளை திரட்டி தருகின்றன. பாட்டியல் நூல்களும் யாப்பிலக்கண கூறுகள் காணப்படுகின்றன.

**முடிவுரை**

ஒரு மொழியில் இலக்கியங்கள் வளர்ச்சி அடைய அடைய அம்மொழியில் உள்ள பழைய இலக்கணம் நெகிழ்ச்சியடையும் என்று நன்னூல் கூறுவதால் இலக்கியத்திலும் இலக்கணத்திலும் பழமை நீக்கப்படுதலையும் புதுமை வரவேற்கப்படுதலையும் அறிய முடிகிறது.

தொல்காப்பியர் காலத்திற்கு பிற்பட்ட இலக்கியங்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப காலத்தின் தேவையை பூர்த்தி செய்யப் பெற்ற நூலாக யாப்பருங்கலம் உள்ளது.

தொல்காப்பியம் முதற்கொண்டு யாப்பிலக்கணம் தோற்றம், வளர்ச்சியும் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

♦

# ‘‘வெள்ளத்தாண்டம்’’ வரலாற்று மகா காவியத்துக்கு திருப்பூர் தமிழ்ச்சங்கம் வழங்கிய பரிசு




திருப்பூர் தமிழ்ச்சங்கம் தனது 25ஆவது வெள்ளி விழா ஆண்டையொட்டி 31.1.2018 அன்று திருப்பூரில் நடத்திய புத்தகக் கண்காட்சியில் நீதிபதி மு. புகழேந்தி எழுதிய வெள்ளத்தாண்டவம் வரலாற்று மகா காவியம் என்ற நூலை சிறந்த நூலாக தேர்வு செய்து சான்றும், பட்டையமும், நிதியும் தந்து பாராட்டியது. தமிழக தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா.பா. பாண்டியராஜன் அவர்கள் நீதிபதி மு. புகழேந்தி அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.

விழாவில் கால்நடை துறை அமைச்சர் இராதாகிருஷ்ணன், திருப்பூர் தமிழ்ச்சங்கத் தலைவர் டாக்டர் ஆ. முருகநாதன், செயலாளர் ஆடிட்டர் சு. லோகநாதன் மற்றும் மாவட்ட ஆட்சியர், சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். தமிழ்ச் சான்றோர் பெருமக்கள் பலரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

♦

# பதிற்றுப்பத்து பாடல் தலைப்புகளின் தொடரமைப்பு



**ஏ. மேரிநேச பிரியம்,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)
கிழக்குத் தாம்பரம், சென்னை- 600059

பாட்டும் தொகையும் என்று அறியப்படும் சங்க இலக்கிய நூல்கள் காலப் பழமையும் கருத்துச் செறிவும் வாய்ந்தவை. சங்க இலக்கியங்கள் உள்ள டக்கத்தாலும் பொருள் உணர்த்தும் முறைகளாலும் தனித் தன்மை வாய்ந்தவை களாகும்.

பண்டையத் தமிழ்ச் சமூகத்தின் வரலாறு, வாழ்வியல், தத்துவம், கலைகள் போன்றவற்றையும் சங்க இலக்கியங்கள் புலப்படுத்து கின்றன.

சங்க இலக்கிய நூலான எட்டுத்தொகையில் ஒன்றான பதிற்றுப்பத்தின் பாடல் தலைப்புகளின் தொடரமைப்பு இங்கு ஆராய்ந்து அணுகப்படு கின்றது. பதிற்றுப்பத்தின் எழுபத்தொன்பது பாடல்களின் தலைப்பு தொடரமைப்புகள் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகின்றது என்றும், ஒரே ஒரு பாடல் தலைப்பு மட்டும் குறிப்பு வினைமுற்றைக் கொண்டு முடிகின்றது என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

## பாடல் தலைப்புகள் இடம் பெறும் விதம்

ஒவ்வொரு பாட்டின் தலைப்பு களுமே அப்பாட்டினுள் இருந்தே பாடல் தலைப்புகளாக கூறப்படு கின்றது. ஒவ்வொரு பாட்டிலுமே பொருளால் சிறப்புடைய தொடர் ஒன்றே அப்பாட்டின் பெயராக அமைந்திருக்கின்றது. இப்பாடல் களின் தலைப்புகள் உரையாசிரி

யர்களால் எழுதப்படவில்லை என்றும், நூலாசிரியர்கள், தொகுத்தோர் இவர்களால் துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவை சூட்டப்பட்டிருக் கின்றன என்பதை அறியமுடி கின்றது. சேர மன்னர்களின் பல வகையான சிறப்புப் பண்புகள் பாடலில் கூறப்பட்டிருப்பினும் பொருளால் சிறப்புப் பெற்ற பாடல் தொடர்களே பாடலின் பெயர்களாக அமையப் பெற்றிருக் கின்றது.



பாடல்களில் இருந்து தலைப்புகள் சூட்டப்பட்டிருப் பினும் அப்பாடல் தலைப்புகள் பாடல் தொடர்களில் இருந்து அப்படியே சூட்டப்படாமல் சில பாடல் தொடர்கள் சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டு அமைந்திருக்கின்றதை அறிய முடிகின்றது. அந்த சிறுமாற்றங் களும் கூட பொருள் சிறப்பிற் காகவே மாற்றம் செய்யப் பட்டிருக்கின்றதை அறிய முடி கின்றது. அச்சிறு மாற்றங்கள் பின்வருமாறு அமையப்படு கின்றன. எழுபத்து இரண்டு பாடல்களின் தலைப்புகளில் எவ்வித மாற்றமும் இன்றி பாடல் தொடர்கள் அப்படியே அமைந்திருக்கின்றன. மீதமுள்ள எட்டுபாடல் தலைப்புகளில் இன், ஆடும், ஓடு, உம், அர் என்னும் வேற்றுமை உருபும், இடைச்சொற்களும் நீக்கி பாடல் தலைப்புகள் அமையப் பெற்றிருக் கின்றன. இவை பாடலின் பொருள் சிறப்பின் காரணமாக பாடல் தலைப்பின் இறுதியில் நீக்கப் பெற்றிருக்கின்றன.

**(எ.கா) புண்ணுமிழ் குருதியின்**
**இதில் இன்**

என்னும் ஐந்தாம் வேற்றுமை உருபு நீக்கப் பெற்று புண்ணுமிழ் குருதி என்று பெயர்த் தொடர் அமைந்துள்ளது.

**வலம்படு வென்றியும் இதில் உம்**

என்னும் இடைச்சொல் நீக்கப்பெற்று வலம்படுவென்றி என்று பாடலின் பெயர் அமைந்துள்ளது.

நன்னுதல் விறலியராடும் என்னும் தொடரில் ஆடும் என்னும் சொல் நீக்கப்பெற்று நன்னுதல் விறலி என்று அமைந்துள்ளது.

வெண்போழ்க் கண்ணியர் இதில்
அர்

என்னும் விகுதி நீக்கப்பெற்று வெண்போழ்க் கண்ணி

என்று அமைந்துள்ளது. பாடல் தலைப்புகளின் எண்கள் 32(ப்), 41(ப்), 55(க்) என்னும் ஒற்றுகள் பாடலின் இறுதியில் நீக்கப்பெற்று பாடல் தொடர்கள் அமைந்துள்ளன. கழையமல் கழனி(ப்), சுடர்வீவேங்கை (ப்)துஞ்சும்பந்தர்(க்).

பாடல் எண் 73ல் நிறம் திகழ்பாசிழை என்னும் பாடல் வரி உ. வே.சா. பதிப்பு, கழக வெளியீடு போன்றவைகளில் காணப்படவில்லை. பாசிழை என்னும் சொல் இரண்டு பதிப்பு களிலும் காணப்படுகின்றது. ஆனால் நிறம் திகழ் என்ற சொல் இரண்டு பதிப்புகளிலுமே காணப்படவில்லை. ஆனால் அதற்கு பின்புவந்த பதிற்றுப் பத்து தெளிவுரைகளுடன் கூடிய உரைகளில் நிறம் திகழ்பாசிழை என காணப்படுகின்றது (1974). பொருள்சிறப்பு கருதி இவ்வரி சேர்க்கப்பட்டிருக்கலாம்.

இப்பெயர் தொடர்கள் 64 பாடல்களில் பாடல் தொடரின் முதலில் வரும் தொடர்கள் பாடலின் தலைப்புகளாக அமைந்துள்ளன. 16 பாடலின் தலைப்புகள் பாடலின் இறுதித் தொடர்கள் பாடலின் தலைப்பு களாக அமைந்துள்ளன.

இவ்வாறு பாடல் தலைப்புகள் தொடர்களின் முதலிலும் இறுதியிலும் எடுத்தாளப் பெற்று இருப்பதன் காரணம் பாடலின் பொருள் சிறப்பும் எதுகை, மோனை அமைப்புகளும் தொடர்கள் எளிதில் புரியும் வண்ணமும், நினைவில் கொள்ளு வதற்கு எளிமையான தொடர்களே பாடலின் தலைப்புகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பாடல் தொடர்கள் ஒரு குறிப்பிட்ட அடிவரையறைக்குள் எடுத்தாளப் பெறாமல் முதல், இடை, கடைபகுதிகளில் இருந்தும் பாடல் முழுவதும் பாடல் தலைப்புத் தொடர்கள் அமைந்திருக்கும் தன்மையினை அறியமுடிகின்றது.

## பாடல் தலைப்புகளில் சொல் பிரிப்புநிலை

ஒரு பாடல் தொடரை எடுத்துக்கொண்டால் அதிகபட்ச மாக நான்கு சொற்கள் அமைந்திருக்கும் தொடரையும், குறைந்தபட்சம் இரண்டு சொற்கள் அமைந்திருக்கும் தன்மையையும் அறியமுடி கின்றது.

எண்பது பாடல் தொடர் களிலுமே இரண்டு சொற்கள், மூன்று சொற்கள், நான்கு சொற்கள் கொண்ட தொடர்களே பாடலின் தலைப்புகளாக அமைந்திருக்கின்றன.

இரண்டு சொற்கள் கொண்ட பெயர்த்தொடர்கள் எண்பது பாடல்களில் 15 பெயர்களின் தொடர்கள் இரண்டு சொற்களைக் கொண்டுமுடிகின்றன. இந்த 15 பெயர்த் தொடர்களும் இறுதி சொல் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகின்றது.

எ.கா 1. பூத்த நெய்தல் (பதி- 13)

2. கூந்தல் விறலியர் (பதி-18)

இந்த இரண்டு சொற்களை கொண்டு அமைந்த பெயர்த் தொடர்கள் முன் ஒருகுறிப்பிட்ட சொல்வகையே பெயர்ச் சொல்லுக்கு முன் அமைகின்றன. இந்த பெயர்ச் சொற்கள் மூன்று வகையான இலக்கண சொற்களை ஏற்று வருகின்றன.

அவை,

1. பெ-பெ =6

2. பெ.எ-பெ=8

3. பெ.அ-பெ=1

எ.கா

1. கூந்தல் (பெ) விறலியர் (பெ) (பதி-18)பெ-பெ

2. பூத்த (பெ.எ) நெய்தல் (பெ) (பதி-13)பெ.எ-பெ

3. ஏம(பெ.அ) வாழ்க்கை (பெ) (பதி-68)பெ.அ-பெ

இங்கு இரண்டு சொல் கொண்ட பெயர்த் தொடரமைப்பு பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகின்றன என்பதை அறிய முடிகின்றது.

மூன்று சொற்கள் கொண்ட பெயர்த்தொடர்கள்

எண்பது பாடல் தலைப்பு தொடர்களில் 50 பாடல் தலைப்புகளின் தொடரமைப்புகள் மூன்று சொற்கள் கொண்டும், இறுதி சொல் பெயர்ச் சொல்லைக் கொண்டு முடிகின்றது என்றும் ஒரேஒரு பாடல் மட்டும் குறிப்பு வினைமுற்று கொண்டு முடிகின்றது என்பதை அறியப் படுகின்றது.

எ.கா

1. புண்உமிழ்குருதி (பதி-11)

2. சீர்சால்வெள்ளி (பதி- 24)

இந்த மூன்றுவகை சொல் தொடரைப்புகளில் பெயர்ச் சொல் ஆறுவகையான இலக்கண சொல் வகையை ஏற்று வருகின்றன.

அவை,

1. வி-பெ=24

2. பெ.அ-பெ=4

3. பெ-பெ=18

4. பெ.எ-பெ=2

5. இ.சொ(உ.உ)-பெ=1

6. பெ-கு.வி.மு=1

1. தசும்பு(பெ) துளங்கு(வி) இருக்கை(பெ) (பதி-42)வி.-பெ

2. கயிறு (பெ) குறு(பெ.அ) முகவை(பெ) (பதி-22) பெ.அ-பெ

3. சுடர் (பெ) வீ (பெ) வேங்கை (பெ) (பதி-41) பெ-பெ

4. சில் (பெ.அ) வளை (பெ.எ) விறலி (பெ) (பதி-57) பெ.எ-பெ

5. வரை(பெ) போல் (இ.சொ.) இஞ்சி(பெ) (பதி -62)இ.சொ-பெ

6. அட்டு(வி.எ) மலர்(பெ) மார்பன் (கு.வி.மு) (பதி-20)பெ-கு.வி.மு

நான்கு சொற்கள் கொண்ட பெயர்த் தொடர்கள்

எண்பது பாடல் தொடர் தலைப்புகளில் 15 பாடல் தலைப்புகள் நான்கு சொற்களைக் கொண்டும் இறுதியில் பெயர்ச்சொல்லைக் கொண்டும் முடிகின்றன.

எ.கா.

1. மறம்வீங்குபல்புகழ் (பதி -12)

2. கான்உணங்குகடுநெறி (பதி -25)

இந்த நான்கு சொல் தொடரமைப்புகளில் பெயர்ச்சொல் முன்னர் இரண்டு வகையான இலக்கண சொற்களை ஏற்று வருகின்றன. அவை,

1. பெ.அ-பெ=12

2. பெ-பெ=3

1. வெந் (பெ.அ)திறல் (பெ) தடக் (பெ.அ) கை (பெ) (பதி-86) பெ.அ-பெ

2. வெரு (பெ) வரு (வி) புனல் (பெ) தார் (பெ) (பதி- 50) பெ-பெ

இத்தொடரமைப்புகளில் இவ்வகையான சொற்கள் மட்டுமே இடம் பெறுவதற்கான காரணம் சொல் எனப்படும் பெயரே வினை என்று ஆ இரண்டென்ப அறிந்திசினோரே. (தொல்-643)

பெயர்ச்சொல்லும், வினைச் சொல்லும் முதன்மை சொற்கள் என்பதை நாம் அறிவோம். இம் முதன்மைச் சொற்கள் அடை மொழி புணர்த்த சொற்களை தமக்கு முன்வர அனுமதிக்கின்றன என்பதை அறியமுடிகின்றது. அடைமொழி புணர்த்த சொற்களாக இத்தொடரமைப்புகளில் பெயரடை, பெயரெச்சம், வினையெச்சம் போன்ற சொல் வகைகள் இடம் பெறுவதை அறியமுடிகின்றது.

♦

# சிங்கப்பூரில் "வெள்ளத்தாண்டவம்" நூல் வெளியீட்டு விழா



சிங்கப்பூர் மா. அன்பழகன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. தினகரன், ஆசிரியர் கவிஞர் நீதிபதி மூ. புகழேந்தி, நா. ஆண்டியப்பன், பிச்சினிக்காடு இளங்கோ, சுப அருணாச்சலம்

**சி**ங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகமும், கவிமாலையும் இணைந்து 28.01.2018 அன்று தேசிய நூலக அரங்கில் நடத்திய விழாவில் கவிஞர் நீதிபதி மூ. புகழேந்தியின் வெள்ளத்தாண்டவம் நூலினை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. தினரகன் வெளியிட ஜோதிமாணிக்கம் பெற்றுக் கொண்டார். முனைவர் சுப. திண்ணப்பன் தலைமை ஏற்க நூலினை சி.எ.க. தலைவர் நா. ஆண்டியப்பன் ஆய்வு செய்தார். மூத்த எழுத்தாளர் ஏ.பி. ராமன், கவிமாலை, மா. அன்பழகன், பிச்சினிக்காடு இளங்கோ வாழ்த்துரைக்க இறைமதி வரவேற்க சுப அருணாச்சலம் தொகுக்க ஆசிரியர் நீதிபதி மூ. புகழேந்தி ஏற்புரை வழங்கினார்.

♦

# ‘‘வெள்ளத் தாண்டவம்’’

**சுப. தி. ஐயாவின் தலைமை உரை**

**சி**ங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகமும் கவிமாலை அமைப்பும் இணைந்து 28.1.2018 அன்று தேசிய நூலக அரங்கில் **‘‘வெள்ளத் தாண்டவம்’’** வரலாற்று மகாகாவிம் நூல் வெளியிட்டு விழாவில் பேரா. முனைவர் சுப. திண்ணப்பன் வழங்கிய தலைமை உரை.

**அன்பர்களே, வணக்கம்.**

இலக்கியத்திற்கு வடிவம் இரண்டு. ஒன்று கவிதை, மற்றொன்று உரைநடை. திங்கள் தோறும் சிங்கப்பூரில் இவ்விரண்டு வடிவங்களையும் தனித்தனியே வளர்க்கும் இரண்டு அமைப்பு களும் இணைந்து நடத்தும் ஓர் நூல் வெளியீட்டு விழாவில் தலைமை ஏற்க வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் என் உடல் நிலை காரணமாக அதை இழக்க நேரிட்டது வருந்துகிறேன். பொறுத்தருள்க.

நீதிபதி புகழேந்தியின் ‘‘வெள்ளத்தாண்டவம்’’ ஒரு வரலாற்று மகாகாவியம். அருமையான தலைப்பு வெள்ளம் என்றால் நீர் என்று பொருள். இதைத் தமிழின் சேய் மொழியான மலையாளம், ‘‘சுக்கு வெள்ளம்’’ போன்ற சொற்களை இன்றும் வைத்துக் காப்பாற்றி வருகிறது. ‘‘வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம் உள்ளத் தனையது உயர்வு’’ என்னும் குறளும் தண்ணீர் என்ற பொருளில் இச்சொல்லைக் கை யாள்கிறது. ஒரு காப்பியத்திற்கு தன்னேரில்லாத தலைவன் கட்டாயம் தேவை என்கிறது தமிழ் இலக்கணம் ஆகிய தண்டி யலங்காரம் தண்ணீரை விடத் தன்னேரிலாத் தலைவன் வேறு யார் இருக்க முடியும்? இதனை உணர்ந்துதான் திருவள்ளுவர் தனக்குவமை இல்லாதவனாகிய கடவுள் வாழ்த்திற்குப் பிறகு, வான் சிறப்பு என்னும் அதிகாரத்தில் மழை நீரின் மாண்பைப் பத்துக் குறள்களில் பகர்கிறார். அமிழ்தம் போல இனியது; அரியது. இந்த உலகத்திற்கு இன்றியமையாத ஒன்று. பசிப்பிணி போக்கும் பண்பினது உணவாகவும் உணவுப் பொருள்களை உண்டாக்கு வதாகவும் திகழ்வது; உலகத் தார்க்கு அச்சாணியாகிய உழவுக்கு உறுதுணையானது. தானம், தவம் பூசை செழிக்க வழி செய்வது எல்லாவற்றிற்கும் மேலாக பெய்யாது கெடுக்கவும், மீண்டும் பெய்து வாழ வைக்கவும் ஆற்றல் மழைக்கு உண்டு. மேலும் நெடுங்

கடலையும் வற்றச் செய்யும் பேராற்றல் மழை நீருக்கு உண்டு. இத்தகைய வெள்ளத்தைத் தலைப் பாய்த் தாங்கி, தன்னேரில்லாத தலைமையை நீருக்குத் தருவது ஒரு சிறப்பு.

வெள்ளம் - வெள்ளப்பெருக்கு என்பது நாமறிந்த பொருள். வெள்ளம் வரும் முன்னே அணை கட்ட வேண்டும் என்ற பழ மொழியும், ''வெள்ளத்தனைய இடும்பை அறிவுடையான் உள்ளத்தின் உள்ளக் கெடும்'' என்னும் குறளும் இப்பொருளில் அமைந்துள்ளன. வெள்ளப் பெருக்கு, கடற் கொந்தளிப் பால், ஆற்றுப் பெருக்கால், மழை மிகுதியால் வரும். வந்து உலகிற்குப் பேரழிவைத் தரும். ஆனால் சிலவேளைகளில் அதுவே இலக்கிய உலகில் நன்மைகள் தருவதும் உண்டு. சங்க காலத்திற்கு முன்னே தோன்றிய கடற்கோள். குமரிக்கோட்டத் தையும் லெமூரியாக் கண்டத் தையும் அழித்தது. எனினும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய சங்கஇலக்கியங்கள் எஞ்சி நின்றன. சங்ககாலத்தில் ஆதிமந்தி - ஆட்டனத்தி காதல் தோல்வி காரணமாகக் கடற் பெருக்கில் வீழ்ந்து அழிந்தனர். எனினும், பாரததாசனின் ''சேரதாண்டவம்'' என்னும் நாடக நூல் நமக்குக் கிடைத்தது. இடைக்காலத்தில் வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதன் விளைவுதான் மாணிக்க வாசகரின் எலும்பையும் உருக்கும் அற்புத் திருவாசகம். அதுபோல சென்னையில் இருபதாம் நூற் றாண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் விளைவுதான் புகழேந்தியாரின் ''வெள்ளத் தாண்டவம்'' என்னும் காவியம்.

வெள்ளம் என்பதற்கு ஒரு பேரெண் என்று பொருள் தருகிறது. தொல்காப்பியம், ஆம்பல், தாமரை, வெள்ளம் என்பன அந்நூல் கூறும் பேரெண்கள். இவற்றின் மதிப்பு சரியாகத் தெரியாகத் தெரிய வில்லை. எனினும் வெள்ளம் என்பது (Eight to the Power 7) என்று அண்மையில் இங்கே பேசிய சொ. சொ. மீ. சுந்தரனார் சொன்னார். 21 லட்சம் கோடிக்கு மேல் வரும் என்பது அவர் கணக்கு. கம்பனில் சேனைப் படையின் எண்ணிக்கையைக் குறிக்க வெள்ளம் என்பது பல இடங்களில் வரும். பேரெண் போல வெள்ளத் தாண்டவம் என்னும் இந்த நூலும் அளவாலும் (544 பாடல்) தகுதியாலும் பெருமை பெற்றது எனலாம். இயற்கையை மையமாக வைத்தும் மனித நேயத்தைப் பேசுவதும் இதன் மாண்பாகும்.

தாண்டவம் என்பது ஆடல் வகையில் ஒன்று. தமிழர்கள் இதனை 108 வகையாகப் பகுத்தனர். ஆடற்கலையின் மாண்பினைச் சிலப்பதிகாரம் சிறப்புறச் செய்யும். ஆடலரசாக ஆண்டவனையே வழிபடும் இனம் தமிழினம். பொதுவாக

நளினமே நாட்டியத்தின் நற்பண்பு. சில வேளைகளில் நடுக்கத்தையே உருவாக்கும் நாட்டியமும் உண்டு. அதனைத் தாண்டவம் என்று சிறப்புப் பெயரால் குறிப்பிடுவதுண்டு. அந்த வகையில் இந்த நூல் வெள்ளத் தாண்டவம் என்னும் பெயரைப் பெற்றுள்ளது.

எனவே வெள்ளம், தாண்டவம் என்ற இரு சொல் இணைப்பு இந்த நூலுக்கு ஒரு பெருமைதான்.

இந்த அரிய தலைப்பினைக் கொண்ட ஏற்றமிகு நூலை இயற்றிய நீதிபதி புகழேந்தி யாரை நான் நன்கு அறிவேன். இவர் வெண்பாவில் புகழேந்தி என்பதை இவர் இயற்றிய பல வெண்பா நூல்கள் இயம்பும். இவர் கவிதை, கட்டுரை, புதினம், பயணம், வழிபாடு ஆகிய பலவகை நூல்களை எழுதியுள்ளார். ஆங்கிலத்திலும் நூல்கள் ஆக்கியுள்ளார். இது வரை இருபதுக்கும் மேல் நூல்கள் இயற்றியுள்ளார். நல்ல சிந்தனைக் கருத்துகளைச் செப்பும் சிறந்த சொற்பொழி வாளர்.

இவர் இயற்றிய வெள்ளத் தாண்டவம் நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டு கிறேன்.

''எளியபதங்கள், எளியநடை எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை உடையகாவி யம்ஒன்று தற்காலத்திலே செய்து தருவோன்; நமது தாய்மொழிக்குப் புதிய உயிர்தருவோன் ஆகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கம் உள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ளே நயங்கள் குறை படாமலும் நடத்துதல் வேண்டும்.''

மகாகவி பாரதி மேற்கூறிய வற்றை, அவன் எழுதிய பாஞ்சாலி



சபதத்திற்கான முகவுரையில் சொல்லியிருக்கிறான். அவ் வகையில் நீதிபதி. புகழேந்தி யாரும் பாரதி சொன்ன வழியில் சென்று நமது தாய் மொழிக்குப் புதிய உயிர்தந்தவர் ஆகின்றார். அவருக்கு எனது ஆசிகளும், வாழ்த்துகளும் பாராட்டுகளும்.

நன்றி.

♦

# வெள்ளத்தாண்டவம் புகலும் உவமை

- அபிராமி

இலக்கியங்களில் உவமையின் பங்கு என்பது படிப்போர்க்கு படிப்பத்தில் ஒரு சுவையும் செய் யுளைப் புரிந்து கொள்வதில் உள்ள சிக்கலை நீக்கி பொருளைப் புரிந்துகொள்ள உதவிசெய்யும் பான்மையும் ஆகும்.

தமிழ் கவிதை மரபில் உவமைக்கு என்று சிறப்பான இடம் தொடர்ந்திருந்து வருகிறது. அச்சிறப்பை நீதிபதி மூ.புகழேந்தி அவர்களின் வெள்ளத்தாண்டவத் திலும் காணமுடிகிறது. அதனைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரை யின் நோக்கம் ஆகும்.

நூலாசிரியர் இந்நூலில் சற்றேக் குறைய 180 உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார்.

**உவமைச் சிறப்பு**

நூலாசிரியர் கண்ட பொருள் களனைத்தையும் உவமை ஆக்கியுள்ளார்.

1. சூல்கொண்ட மேகம் போல் வாரி அருளினை (பாடல் -4)

2. வேழம் போல் வீரத்தில் சிறந்தநாடு ( பாடல் -8)

3. ஆலையிடைச் செல்லு கின்ற கரும்பைப் போல அகல மிலாச்சந்துவழி (பாடல் -25)

4. தண்ணீரைப் பாலதிலே கலந்தாற் போன்று தண்டமிழில் பிறமொழிகள் வெகுவாய்ச் சேர்த்து (பாடல் -27)

5. நகரெங்கும் பேருந்து நகரமுக்கும் நிறைமாதக் கர்ப்பிணியாய் (பாடல் -32)

6. ஆம்பம்பூ பூத்தாற்போல் வீடுகள் (பாடல் -42)

7. ஏறுபோல் பூரித்திட்டார் ( பாடல் -54)

8.பறங்கியர் அகன்ற காலைப் பாரதம் மகிழ்ந்தார் போன்று வரம்பிலாப் பேரானந்தம் கொண்டதே உண்மையம்மா! (பாடல் -70)

9. அப்பத்திற்கு ஏங்கின்ற பூனைப் போன்று அல்லாடித் தவிக்கின்ற காட்சிதனை. (பாடல் -81)

10. பணம் கொட்டினாற் போலே கலகலென்றே சிரித் திட்டார். ( பாடல் -85)

இதுவரை கண்ட உவமைகள் படித்ததில் மனத்தில் நின்றவை. இனி நூலாசிரியர் பயன்படுத்தி யுள்ள உவமை களின் பட்டியல் பின்வருமாறு

1) இரும்பைச் சேருகின்ற காந்தம் போல மருமகளைக் கொஞ்சுதல்

2) பாத்தியது போல் கன்னம்

3) புலிகண்டமான் போல் மருட்சி

4) உடைந்தபானை போல் பயத்தைப் போட்டுடைத்தல்

5) கும்மிருட்டு போல் வானம்

6) வேண்டாத விருந்தாளி போல் வீதிவெள்ளம்

7) இடிதலையில் வீழ்ந்தது போல் மனம்குலைதல்

8) முக்கியவாகனம் போல தெனாலிராமன்குதிரை

9) ஊழிவெள்ளம்ஊரினில் போல் உருக்குலைக்க

10) ஆணவக்கொலை போல் குறையாமல்பெய்தமழை

11) பெரும்படை போல் வெள்ளம்

12) பொல்லங்குசெய்வார் போல் மழை

13) இடிவிழுந்தால் போல் கத்துதல்

14) கஜினிப்படை போல் முயற்சி வெல்லுதல்

15) பித்தன் போல் அலைத்தல்

16) அணில் போல் கிளைத் தொற்றுதல்

17) வாத்துக்கூட்டம் போல் ஏழையர்

18) மடைதிறந்தாற் போல் வெள்ளம்

19) கொடியார் போல் வெள்ளம்

20) எறும்பு போல் சுறுசுறுப்பு

21) திருடன் போல் வெள்ளம்

22) தண்ணீர் போல் கண்ணீர்

23) கண்ணீர் போல் தண்ணீர்

24) பிறப்பிறப்புக் கணக்காளர் போல வெள்ளம்

25) மடிந்தாற் போல் ஓலம்

26) சறுகுகள் போல் பிணங்கள்

27)சித்திரம் போல செயலற்று நின்றார்கள்

28) வெள்ளக்கொடுமை போல் மாநிலம் கண்டதில்லை

29) உடல்கிழிந்த்து போல் சுவர்கள்உடைந்தன

30) இரை போன்ற உயிர்வழி

31) ஆம்பல் போல் மிதந்தது

32) பாம்புப்புற்றுள் புகுந்தது போல துன்பம்

33) கடல் போன்ற கன்னிமாரா

34) உயிர்பெற்றது போலே குதுகலித்தனர்

35) போட்டியில் வென்ற போல் தோற்றம்

36) சிலை போலே அருண்குமார்

37) கண் போல குடும்பம்

38) படியாதமாடு போல வெள்ளம்

39) இனாம் போலே சேர்ந்திட

40) கன்று போலே ஓடியாடிசேவை

இவ்வாறாக பல உவமைகள் நூல் முழுவதிலும் காணமுடிகிறது.

உவமையின்பால் நூலாசிரியருக்குள்ள ஆளுமையை அவர் பயன்படுத்தி உள்ள இந்த உவமைகளே சான்றுபகரும்.

♦

# உயிரெழுத்து போதனைகள்

**பேரா. மோ. ஐ. மகேஸ்வரி**
*இணைப் பேராசிரியர்*
*ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி*
*(தன்னாட்சி), சேலம் - 15.*




அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு காட்டு
அது உயர்விற்கு வழிகாட்டும்
ஆணவத்தை அழித்துவிடு இல்லையேல்
அது நம்மை அழித்துவிடும்
இல்லாதவரிடம் இரக்கம் காட்டுவதால்
உள்ளத்தில் மனிதநேயம் வளரும்
ஈகையில் உயர்ந்து நின்றால்
வாழ்வில் சிறந்து நிற்பாய்
உள்ளத்தை உறுதிசெய் உடல்
தானே உறுதிபெறும்
ஊக்கத்தை கைவிடாதே கைவிட்டால்
வாழ்வில் வாய்ப்பை கைவிடுவாய்
எட்டிக்காயைப் போன்று பகைவரிடம்
எட்டியே நில்
எட்டினை நாளும் படி அது
வாழ்வில் வெற்றிப்படி
ஐக்கியம் ஆகவேண்டும் இறையிடம்
அது ஆன்மிகத்தின் பிறப்பிடம்
ஒன்றி வாழ்ந்தால் உண்டு வாழ்வு
இல்லையேல் உண்டாகும் தாழ்வு
ஓடம்போன்றது மனம் அதனால்
ஆடவிடாதே வாழ்வை
ஔவை போன்றோரிடம் முனிவு கொள்ளாதே
கனிவு கொள்.

♦